639

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931 ஆம் ஏப்ரல்மீ 2உ [No. 13.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 241
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 243
3. மானத சாத்திரம் (உணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 245
4. பிஸாரோ நாடகம் - (அங்கம்-3, களம்-1, 2)
R. B. Sheridan 247
5. சூளாமணி (உரையுடன்)
குமாரகாலச் சருக்கம் (42—49) 249
6. யாப்பிலக்கணம்—(வஞ்சித்தளை) 251
7. தனிப்பாடல்—(நாமகள்) அம்மானை
க. சோமசுந்திரம் பிள்ளை 253
8. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 255
9. வர்த்தமானம் 259

கலாநிலயம்

(அ89!)

உண்மையில் உழல்வார் திறம்.

ஒருபொருட் பன்மொழிகள் எனச் செப்புவதெல்லாம் ஏகதேசமே யொழிய வேறன்று. உண்மை மெய்ம்மை, என்னு[illegible]ண்டும் பொது முறையில் ஒரு பொருளை[illegible] குறிப்பன[illegible]பால் தோன்றினும் ஆழ்ந்து நோக்குங்கா[illegible]வை [illegible]ற்சிலபோது எதிர் மொழிகளாய் இ[illegible]ருப்ப[illegible]து தென்படும். இத் தெளிவு, நம்முடை[illegible]ய நோக்கங்களையும் செய்கைகளையும் நேர்மைப் படு[illegible] கொள்வதற்கோர் இணையிலாக் கருவியாகுமாதலால் இம்முயற்சி செய்யாமல் அயர்ந்திருத்தல் அழகன்று. உண்மையை யெல்லாம் மெய்ம்மை எனக்கொண்டு உழல்வார் பலர், அம்மயக்கத்தால் உலகத்தையும் பலவகைகளில் உழக்கத் தலைப்படுகின்றனர். உலக அமைதி அழிவதன் காரணங்கள் சிலவற்றுள் இம்மயக்கும் முக்கியமானது. நல்ல எண்ணத்தோடு செய்கின்ற தீமைகளே மிகக் கொடியன; அவைகளைத் தடுப்பதற்குத்தான் தாளாண்மை பெரிது வேண்டும். விடமூட்டித் தன்மகவினை மாய்க்க விழைவாளோர் அன்னையைக்காண்பது அரிதினும் அரிது. அன்னாள் ஒருத்தியிருந்தாலும் மகவினை அவள் கையினின்று பிரித்தகற்றிக் காக்கலாம்; மற்று அவளே தன் பிள்ளை செழித்து வளர வேண்டும் என்னும் விருப்பால் மீதூணருத்தி நோய் வாய்ப்படுத்தப் புகுவாளாயின், அக் குழந்தையைப் பின்னர்க் கடவுளே காக்கவேண்டும்.

உண்மைக்கும் மெய்ம்மைக்கு மிடையே ஓர் வேற்றுமை இருக்கின்றது. ஒருபொருள் எவ்வாறு உளது என்னுமது உண்மை; இருக்குமாறு எவ்வாறாயினும் அவ்விடயம் யாது என்னுமது மெய்ம்மை. ஆதலின், ஒன்றன் உண்மையை அறிந்த வளவிலேயே அதன் மெய்ம்மையையும் உணர்ந்தாற்போல் பாவிப்பது நேரிதன்று. ஒன்றன் தோற்றத்தை உண்மை யென்றும், இயற்கையை மெய்ம்மையென்றும் வழங்குவது ஒருவாறு பொருந்தலாமெனினும் இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமை முற்றிலும் அவ்வழக்கினுள் அடங்கிவிட்டதாகாது. மெய்யுணர்வு மெய்யறிவு மெய்க்கல்வி என்பனபோன்ற தொடர்கள் பெரும்பாலும் இந்நாளுலகவழக்கில், உண்மை யறிவு உண்மைக் கல்வி என்னும் நினைவினோடு தலைமயங்கிப் பயிலலாகின்றன. நம்முடைய கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள், கல்விச் சங்கங்கள், ஆராய்ச்சிச் சாலைகள், பத்திரிகைகள் யாவும், உண்மையைப் புகட்ட முயல்கின்றனவே யன்றி மெய்ம்மையைப்பற்றிக் கனவிலும் நினைப்பதில்லை. உண்மையைப் புகட்ட அவை முயல்கின்றன என்று யாமிங்கு உரைத்தவாற்றால் அவ்வுண்மையைத் தானும் அவை புகட்டிவைக்கின்றன என்று யாம் எண்ணுவதாகக் கொள்ளவேண்டா. வாயையுங் கையையும் விலைக்கோட்டி வயிறு பிழைக்க வழிதேடும் சந்தைக் கூட்டங்களாகவே இவை எங்கெங்கும் அமைந்திருப்பதை இப்பத்திரிகையின் பலவிடங்களிற் காட்டியிருக்கின்றோம். மெய்ம்மை கிடக்க, உண்மையையேனும் உணர்ந்து உய்க்கவேண்டுமெனும் நோக்கமும் செய்கையும் இவைகளின்பால் இல்லாமை வெளிப்படை; ஆயினும் ஆரம்பப் பாடசாலை முதல் சர்வகலாசாலையீறாக நிறுவுதற் கவாவினர்

N31·4·13.

போல், 'நம்முடைய முன்னேற்றத்தைக்' கருதிப் பற்பல பேசுவார் சொற்களைச் சோதிக்குமளவில், 'உண்மை' என்பதையே உட்கொண்டு 'மெய்ம்மையைச்' சாதிக்கவருவதெனை மதிக்கும் மயக்கமே அவர்களை இயக்குகின்றதெனும் இரகசியம் கரந்திருக்கக் காணலாமே.

ஒரு விடயம் எவ்வாறு உளது எனத் தெரிந்து கொள்வதெல்லாம் அதன் மெய்ம்மையைத் தேர்ந்து கொண்டதாகாது. தத்துவ அறிவு உடையோரே இச்சூத்திரத்தை உணர்வார். மின்சார விளக்குக் கம்பிகள்போடும் ஒரு கூலியாள் (Electric-wire-man) ஒருவனை, "இவ்விளக்கு எவ்வாறு எரிகின்றது' என்று கேட்டால், "இந்த ஸ்விச்சை (Switch) அழுத்தினால், அந்த விளக்கு எரியும்; வேறென்ன" என்று, இதனைப்பற்றிச் சொல்வதற்குரிய அத்தனையும் அவ்வாக்கியத்துள்ளே அடங்கி விட்டதென ஐயமற மனத்துட்கொண்டு, "இது தெரியாமல் கேட்டனனே, அவன்" எனச் சிறிது வியப்பவனுமாவான். இவனை விட்டு, எலக்டிரிகல் எஞ்சினியர் (Electrical Engineer) ஒருவனைச் சார்ந்து, "இவ்விளக்கு எவ்வாறு எரிகின்றது" என்று கேட்போமெனின், அவன், பாஸிடிவ் நெகடிவ் என இருவகை மின்சாரச் சக்திகள் அக்கம்பிகளின் வழியாய்ப் பாய்கின்றனவென்றும், இவை எப்பொழுதும் ஒரு வட்டமாக முடிவதற்கு முயலுமென்றும், மேலிருந்து கீழ்பாயும் நீரைப்போல், மிகுந்த அழுத்தத்திலிருந்து தாழ்ந்த அழுத்தத்திற்குப் பாய்கின்ற தன்மை மின்சாரத்திற்கும் உளதென்றும், அவ்வாறு அது பாய்கின்ற இயக்கத்தினளவு அது செல்லும் கம்பியின் பருமனைப் பொருந்தியிருக்குமென்றும், அக்கம்பி நுண்ணியது ஆக ஆக மின்சார சக்தியின் செலவு தடைப்பட்டு விடுகிறதென்றும், அந்தத் தடையினால் மின்சார சக்தியானது முதலில் வெப்பமாகவும் பிறகு வெளிச்சமாகவும் மாறிவிடுகின்றதென்றும், போதுமென்று அவனை நிறுத்துமளவும் ஊக்கமுடன் தன் மின்சாரக் கட்டுரைகளைப் பெருக்கின வண்ணமாயிருப்பான். முன் அந்தக் கூலியாள் சொன்னதும், பின் இந்த எந்திரக்காரன் சொல்வதும் மின்சாரத்தைப்பற்றிய உண்மைகளாகலாம். ஸ்விச்சை அழுத்தினால் மின்சார விளக்கு எரிகின்றது என்பது உண்மை. மின்சார சக்தியின் செலவில் தடை ஏற்படுமானால் அச்சக்தி வெளிச்சமாக மாறுகின்றது என்பதும் ஒரு உண்மை. இவர் உணர்வெல்லாம் அவரவர் அறிந்த உண்மையின் அளவினோடு முடிந்துவிடுகின்றது. அதன்மேல் மின்சாரத்தைப்பற்றி அறிய வேண்டியதற்கோர் மெய்ம்மை இருக்கலாம் என்னும் நினைவும் இவர்களை எய்தியதில்லை. இவ்விருவரையும் விட்டு, இயற்கைத் தத்துவ சாஸ்திரி (natural philosopher) ஒருவனை, "மின்சார விளக்கு எவ்வாறு எரிகின்றது" என்று கேட்போமெனின், "ஐய வாய்மையே நோக்கின், யானறியேன்—இவ்விளக்கு எவ்வண்ணம் அமைந்து உளது என்பது எனக்குத் தெரியலாம்; அதனை எரிவிக்கும் சக்தி யாது என்னும் மெய்ம்மையை யான் எவ்வளவோ ஆராய்ந்தும் இதுகாறும் அறிந்திலேன்" என்னச் சாற்றுவான்.

மின்சார விளக்கிற்குரிய இச்செய்தி மாநுட வாழ்க்கைக்கும் அயலாயதன்று. வாழ்க்கையின் இல ... உண்மைகளைத் தெரிந்து கொண்ட வளவில் அதன் மெய்ம்மையை உணர்ந்து கொண்டதாகாது. மெய்யறிவு மெய்யுணர்வு மெய்க்கல்வி என்னுமிவை அம்மெய்ம்மையையே உட்கொண்டு நிற்கின்றவாயினும், அந்தத் தத்துவத்தை அடியுடன் மறந்து, மின்சாரச் ஸ்விச்சிற்கும் விளக்கிற்கும் உள்ள தொடர்போடு அவைகளை முடித்து விடுவது மிகவும் இரங்கத்தக்கதே.

ஆகலாற்றான் மிகப்பலர், "இம்மாநுட வாழ்க்கையின் தன்மையையான் உணராமுன் அதனை விரும்பியிருந்தேன். இப்பொழுதோ உணர்ந்தேன். உணர்ந்தபின் வெறுக்கின்றேன்" எனக் கழறுகின்றவராகின்றார். இதனில் பெரும்பிழை யொன்றுளது. இப்பொழுதும் இவன் மாநுட வாழ்க்கையின் தன்மையை உணர்ந்தவனல்லன்; தன்மையை உணர்ந்தவனாயின் மெய்ம்மையை உணர்ந்தவனாவான். மெய்ம்மைகண்டவர் ஒருபோதும் வெறுக்கமாட்டார். வாழ்க்கையினிடையே வஞ்சனை, லோபம், அழுக்காறு, கொலை, களவு, காமமாதிய பாவங்கள் தலைவிரி கோலமாய் ஆடிக்கொண்டிருக்கின்ற உண்மையையே கண்டானிவன். வாழ்க்கையின் மெய்ம்மையும் இதனோடு அடங்கிவிட்டதென மயங்கி விட்டான். உடனே வாழ்க்கையைப் பற்றி இவன் மூதாதைகள் கொண்டிருந்த உயர்ந்த நோக்கங்களெல்லாம் சிதைந்தழிகின்றன. இது தவிர வேறு இருக்கின்றதெனும் நினைவேனும் இவனுக்கு இருக்குமாயின் ஒருநாளல்லாக்கால் ஒருநாள் இம்மயக்கக் கடலினின்று கரையேறினும் ஏறலாம். அவ்வாறு ஏறமாட்டாமல் அழிந்து போவதை முன் சொன்ன, ஷாமல் ஹௌஸன் என்பார் அவர் காட்டும் காரணத்தோடு காணலாம். சொல்கின்றாரவர்:—

Another point of approach is the realization of man's childish delight in make-believe which he refers to as idealism. Man does not find easy to absorb reality. The reason is clear at length. Reality represents disharmony, imperfection, evil. His infantile imagination creates a private universe in which harmony, perfection, good, rule as the holy trinity of the inner life. When confronted with the contradiction between his private imaginary universe and the public realistic world, his first tendency is to deny objective reality and to slide back into the comfort and reaffirmation of subjectivism. The ancient dualism between idealism and realism resolves itself into the conflict between infantile make-believe and mature disillusionment. Once we perceive how deeply rooted in his childish theatric nature is the disposition to accept illusion and to deny or flee from disillusion, we shall be close to the heart of the matter: pretence soothes the mind of man, reality disturbs it.

இவ்வாசகத்திலுள்ள ஒவ்வொரு சொல்லும் உண்மையே யாகலும், மெய்ம்மையோ இவ்வழிவிற் ... "பொய்யோ பொய்" என ஓலமிடுகின்றதே.

[library stamp]

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

24. யோகம்

[228-வது பக்கத் தொடர்ச்சி]

4. தேக தத்துவங்களின் உற்பத்தி; உணர்ச்சி.

தேகமானது எவ்வாறு உதித்து வளர்ந்ததென்பதை அறிந்தாலன்றி வளர்ச்சி பூர்த்தியான காலத்தில் நெருங்கும் அழிவைத் தடுத்து உடலை மாற்றிச் சற்றுப் புதுவுடல்போல் தேகத்தைச் செப்பனிடுதல் கூடாதாம். இதனாலே, தேக வுற்பத்தியைத் தேவாரத்தில் ஆங்காங்குக் குறிப்பிடுவதுமன்றி, தேக ஆரம்ப காலத்திலிருந்த இளகியநிலைக்கு இவ்வூனை மாற்றுவதும் யோகாப்பியாசிகளுடைய நோக்கமாகும். அதைக் குறிப்பிடுவதுபோல் அப்பரும்,

"ஞான மாகிய நன்குண ராணையார்
ஊனை வேவ வுருக்கிய வானையார்
வேன லானை யுரித்துமை யஞ்சவே
நான லானை கண்டீர்கட வூரரே"

திருக்கடவூர் - திருக்குறுந்தொகை 3.

என, மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயதளித்த திருப்பதியாகிய திருக்கடவூரில் பாடிய பதிகத்தில் காட்டிய சிறப்பை நோக்குக. நமது தேகம்,

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளேலும்புஞ் சேர்ந்தோன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கோருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டியாருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேன் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா! திருத்தெங் கூராய்!
செம்பொனே கம்பனே! திகைத்திட் டேனே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 6.

புறப்பட்டகாலத்தில் இத்தேகமானது ஒவ்வொரு பாகமும் உள்ளே நின்ற தேவியால் போஷிக்கப்பட்டு வளரும். வளர்ந்தபின்னர் அத்தேவியின் சம்பந்தம் குறைய ஆரம்பிக்கும். இங்கேயே மரணாவஸ்தைக்கு அடிப்படைகள் ஏற்படுகின்றன. யௌவனம் கடந்த பிறகு முதுமை வருங்காலத்தில் அழிவு ஏற்படுகின்றதென்று எண்ணலாகாது. உலக வாழ்க்கையின் *ஆரம்பமே, அதன் அழிவுக்கும் ஆரம்பமாம்.

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமும்தெளியகில்லேன்

திருக்கடவூர் - திருநேரிசை 6.

என்றும்,

"பொம்மறித் தியற்றி வைத்துப்
புலால்கமழ் பண்டம் பெய்து
பைம்மறித் தியற்றி யன்ன
பாங்கிலாக் குரம்பை நின்று
கைம்மறித் தனைய வாவி
கழியும்போ தறிய மாட்டேன்
செந்நெறிச் செலவு காணேன்
திருக்கொண்டீச் சரத்து ளானே"

திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை 8.

என்றும் உலகஅறிவு ஆரம்பமாவதற்குமுன் ஒரு சீவன் தேவியின் கருணையுடன் தேகக்கட்டு அமைக்கும் தொழிலில் உள்ளே கவனிக்கும் சிந்தையாயிருக்கின்றான். அவன் வெளிவந்து குழவியாய் அழுங்காலத்திலும் நித்திரையும் மயக்கமுமே பெரும்பாலும் அவனிடம் காணப்படும். பிறகு தத்துவங்கள் தங்கள் தங்கள் தொழில்களை அவன் விரும்பாமலே செய்ய ஆரம்பித்துச் சுயேச்சையாய் ஒரு யந்திரம்போல் தேகத்தில் இயங்கவும், வெளிப்பார்வையில் இவன் ஈடுபட்டுக் கருவிகளைத் தொகுக்கும் செயலை நாளடைவில் மறக்கின்றான். இக்கருத்தைத் திருநாவுக்கரசு ஒருவாறு வெளியிடுகின்றதைக் காண்க:—

தொண்டனேன் பிறந்து வாளா
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து
போவதோர் வழியுங் காணேன்
அண்டனே யண்ட வாணா!
யறிவனே யஞ்ச லென்னாய்
தெண்டிரைப் பழனஞ் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.

திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை 2.

நமது அறிவில் இயங்கி, நமது கட்டுக்கு அஞ்சி நமது எண்ணப்படி தேகக் கருவிகள் யாவும் நிகழாமல், நமது தொழில் இப்பிண்டத்தைச் சுமந்து நைந்துபோதலால் நேர்வதே மரணாவஸ்தையின் முதற்பாகமென்னலாகும். இத்தகைய ஆட்சியற்ற தேக ராச்சியத்தை நாம் பரிபாலனம்செய்வது பொதி சுமந்து உழல்வதொக்கும். இக்கருத்தை வன்றொண்டரும்,

பொதியேசுமந் துழல்வீர்பொதி யவமாவது மறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும்வினையால்
கதிசூழ்கட லிலங்கைக்கிறை மலங்கவரை யடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தாணிடம் கேதாரமென் னீரே.

எனத் திருவாய்மலர்ந்தருளினமை காண்க. திருநாவுக்கரசும்,

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணு ளேக்குமிது வூக்கம் அன்று
பல்லுருவிற் றொழில்பூண்ட பஞ்ச பூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்று முருவ மூன்றாய்த்
தூாயன மூன்றாகி யாண்ட வாரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவே னும்மா[ளோ
னமைப்புண்டேனே கமைத்துநீர் நடமின்

திருவாரூர் - திருத்தாண்டகம் 2.

என்னும் பாசுரம் காண்க.

* "பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளு நாளாலற முளவே?
அறிவானிலு மறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமென் னீரே"

சுந்தரர்.

5. குண்டலி சக்தி.

இன்னம் பிறப்பதற் கிடமென்னி லிவ்வுடல
 மிறவா திருப்ப மூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண்ட லத்திலுற
 என்னம்மை குண்டலினி பால்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
 பேயேனை நல்க வேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டெனி னிம்மையே
 பேசுகர்ப் பூர தீபம்
மின்னும் படிக்ககண் டாகார வன்னைபால்
 வினையேனை யொப்பு வித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன் றிவைபன்றி
 விவகார முண்டெனி லோ
தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
 சன்மார்க்க முத்தி முதலே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
 சச்சிதா னந்தசிவமே.

தாயுமானவர் - சச்சிதானந்தசிவம் 9.

மேற்கண்ட தாயுமானவர் செய்யுள், குண்டலி சக்தியின் மகிமையும் அதனால் காயசித்திபெற்றுப் பல காலம் உய்யவும், அக் காலக்கிரமத்தில் வீட்டுநெறி யடைதலும் எவ்வாறு இராஜவீதியாய் விளங்குமென்பதை இங்கு எடுத்துக் காட்டும்.

குண்டலி சக்தியாவது யாது? அது தேகத்தில் எங்குளது? அது எவ்வாறு இத் தேகத்தை வளர்க்கும்? அவ் வன்னைபால் நம்மை ஒப்புவித்தலாவது யாது? என்பன சற்று ஆராய்வோம்.

நமது தேகத்திலுள்ள குண்டலிசக்தி யிதுவென வுருவகப்படுத்துவதுபோல் திருப்பாற்கடலில் திருமாலின் சேஷசயனத்தையும் சிவபெருமானது நாகாபரணத்தையும் மேலோர் காட்டினர்.

பிறையரவக் குறுங்கண்ணிச் சடையி னன்காண்
 பிறப்பிலிகாண் பெண்ணோடா ணாயி னன்காண்
கறையுருவ மணிமிடற்று வெண்ணீற் றன்காண்
 கழறொழுவார் பிறப்பறுக்கும் காபா லிகாண்
இறையுருவக் கனவளையா ளிடப்பா கன்கா
 ணிருநிலன்கா ணிருநிலத்துக் கியல்பா னன்காண்
சிறையுருவக் களிவண்டார் செம்மை யான்காண்
 திருவாரூ ரான்காணென் சிந்தை யானே.

திருவாரூர் - திருத்தாண்டகம் - 9

நமது தேகத்திற்குப் பிரியாப் படுக்கைபோல், (திருமாலின் சேஷசயனம்போல்) பல்லாயிர முகங்கொண்டதோர் நல்ல சர்ப்பம் ஒன்று நமது உடற்கருவிகளை எப்பொழுதும் காத்துவருகின்றது. இப்பாம்பு, இயற்கையிற்காணப்பட்ட பாம்புக்குமாறாய், அமிர்தத்தையுண்டு விஷத்தைத் தாராமல், விஷத்தையுண்டு அமிர்தத்தைக் கொடுக்கும். இதன் பணாமுடியில் ஜீவரத்தினம் நிலைக்கும். அதனால் உள்ளிருக்கும் ஆதாரமும், வெளியே காணப்படும் பலகோடி அண்ட சராசர பஞ்சபூதத் தத்துவவுண்மையும் நூதன ஒளிகளுடன் விளங்கும். இக்குண்டலிக்கு யாதொரு பின்னமும் நேராமல் ஒருவன் பாதுகாப்பானாயின் அது தாயுமானவர் கூறியவாறு அவனைச் சேய்போல் பாதுகாக்கும். இதுவே நள்ளமிர்தாம் வள்ளலாய்த் தேகத்தை ஒவ்வொரு கூற்றிலும் வசப்படுத்துவதுடன், சர்வாண்டங்களையும் அடக்கும் பெருஞ்சக்தியையும் தரும்:—

ஐம்பெருமா பூதங்கா ளொருவீர் வேண்டிற்
 றொருவீர்வேண் டரீண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே யும்வசமே யாக்க வல்லீர்க்
 கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே ழாகி
 யொள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற வரனைக் காண்பான்
 தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 2.

என்னும் அப்பர் துணிவைக் காண்க.

நமது தேகத்தில் தலையில் மூளையாய் நிரம்பி முதுகெலும்பு வழியாய் ஓடி ஒவ்வொரு தசையிலும் சென்று பரிசவுணர்ச்சி தருவதுடன் நீட்டல், மடக்கல், வளைத்தல் முதலிய செய்கைகளுக்கு ஆதாரமாய் நிற்கும் "நரம்புத் தத்துவம்" மொத்தமாய்ச் செலுத்தும் ஆட்சியே குண்டலியென மேலோர் குறிப்பிட்டதாய் விளங்குகின்றது. நமது தேகத்தில், இருதயம் நீங்கலாக உள்ள மற்றத்தசைகள் இருவகைப் படுமென்றும் அவை நமது ஆட்சிக்கு உட்படாத தசைகளென்றும் உடற்கூற்றுத் தத்துவ சாஸ்திரிகள் கூறுவர். நமது குடல் தீனிப்பை ஈரல் முதலியன நமது சுதந்திரத்தில் நிற்காமல் சிறுபோதினின்று, தமது தொழில்களைச் செய்யுமாறு நமது அறிவுக்கு அதிகமாய்நின்று இயங்குமென்பதும், குழந்தைப்பருவத்தின் தொடக்கத்தில் அவை மனிதனுக்கு வசமாயிருந்தனவென்றும் அந்தச்சாத்திர அறிஞர்கள் கூறுகின்றார். நினைவாகி, அறியப்படும் செய்தொழில்களின் ஆட்சியை நமதுமூளையிலுள்ள பாகங்கள் ஒருகாலத்தில் பெற்றிருந்தன வென்றும், அத் தொழில்களின் வழக்கப்படி நடக்க ஆரம்பித்ததால் நினைவின்றியே இயங்க ஆரம்பித்தபோது மூளையின்பாகங்கள் முதுகின்வழி யிறங்கவும் ஜடத்தன்மை யதிகரித்து ஒரு யந்திரம்போல் (Automatic) தானே நடந்துகொள்ளும் கருவிகளாய் முடிந்தன வென்றும், வேண்டுமானால் மறுபடியும் அக்கருவிகளை அறிவுக்கருவிகளாய் நாம் மாற்றலாமென்றும் உடற்கூற்றுச் சாஸ்திரிகள் மேல்நாட்டிலுங்கூட நம்புகின்றார்கள். எனவே அறிவின் சம்பந்தமற்று, நினைப்பு யாதுமின்றி இயங்கும் யந்திரம்போன்ற நரம்புகள் ஒருகாலத்தில் மூளையின் பாகமாய் அறிவுடன் சம்பந்தப் பட்டதென்பது திண்ணம் - ஆகையால் நரம்புத் தத்துவமானது ஒரு பெருஞ் சர்ப்பம்போல் பணாமுடிகளை மூளைப் பாகங்களாக அமையப்பெற்று அதன் மத்தியதேசம் முதுகெலும்பிலுள்ள மூளைநரம்பாயும், தேகமுழுவதும் பரவியிருக்கும் நரம்பின் கிளைகள் அதன் பல்லாயிரம் வால்களாகவும் நின்றுவிளங்கும். யோகாப்பியாசிகள் மேற்கண்ட வால்களைத் தலையாகவும் தலையை வால்களாகவும் மாற்றி நிற்குங்காலை, தலைகீழாக மாற்றப்பட்ட இக்குண்டலியென்னும் பெரும்பாம்பு மிகவும் ருத்ராகாரமாய்த் தேகத்திலுள்ள விஷநீர் யாவற்றையும் சிவபெருமான் திருப்பாற்கடலிற்பிறந்த காளவிஷத்தை உண்டதுபோல் உண்ணும்.

மண்டலை யிரந்து கொண்ட மாயனோ டசுரர் வானோர்
தெண்டிரை கடைய வந்த தீவிடந் தன்னை யுண்ட
கண்டனைக் கடல்சூழ் நாகைக் காரோணக் கோயில் [கொண்ட
அண்டனை நினைந்த நெஞ்சே யம்மநா முய்ந்த வாறே.

திருநாகைக்காரோணம் - திருநேரிசை 4.

நமது தேகத்தில் தீவினைகளான அசுரர்களும் நல்வினைகளான தேவர்களும் மாயோனும் வந்திருக்கிறாரென்பது வெளிப்படை. இத் தேகமான பாற்கடலை யோகாப்பியாசத்தால் குண்டலியைக்கொண்டு கடையுங்கால் முதலில் விஷநீர், குண்டலி சக்தியால் உண்ணப்படுதலும் அமிர்தம் வெளியாகும். இப்பாம்பு, விஷம்தின்று அமிர்தம் கக்கும் பாம்பு என்று மேலோர் பகர்வர்.

மானதசாத்திரம்

[PSYCHOLOGY]

[214-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

உணர்வு.

புகுவாய் நரம்புகளும் இயங்குவாய் நரம்புகளும், பல நிலைகளில தொடர்புண்டு கிடப்பதைக் கண்டோம் அடிநிலை நரம்புவட்டம், இடைநிலை நரம்புவட்டம், மேனிலை நரம்புவட்டம் என்ற பாகுபாட்டையும் கண்டோம். இடைநிலை நரம்புவட்டங்களை இணைப்பவைகளே மேனிலை நரம்புவட்டங்களாகும். அவற்றில் ஒருவகை வட்டங்கள், இயக்க எல்லையையும், மற்றைய புல எல்லைகளையும் பலவகையாக இணைக்கின்றன. இவை, அடிநிலை நரம்புவட்டத்தோடிணைந்த இயக்கநரம்புகளில் சென்று முடிகின்றன. வேறொரு வகை வட்டங்கள், இயக்க வெல்லை நீங்கிய மற்றைய புல வெல்லைகளைப் பலவகையாக இணைக்கின்றன. இவை புலவெல்லையைச் சுற்றியுள்ள இணைப்பெல்லைகளில் காணக்கிடப்பன. இம் மேனிலை வட்டங்களிலுள்ள நரப்பங்கள் உயிரிகள் (உயிருடையன) முதிர்ச்சி யடைந்தபின்னரே முற்றி வளர்கின்றன. புறநரப்பங்கள் பிறக்கும்பொழுதே முதிர்ச்சியுற்று விளங்குகின்றன. முன்மூளைப் புறணியின் (Cortex) பெரும்பகுதியில் இவ்வட்டங்களே விளங்குகின்றன. ஆதலின் இவை உயிரிகளின் உயர்நிலைக் கறிகுறியாக நிற்கின்றன. முறுக்கைத் தின்கின்றேன். அதன் சுவை, மணம், வடிவம், நிறம், பொரிபொரியாக இருக்கும் ஊற்றுணர்வு, தின்னும்போ தெழும் ஒலி என்ற இவையனைத்தும் ஒன்றாக இயைந்து முறுக்கு என்ற பொருளைக் குறிக்கின்றன. முறுக்கின் உணர்வு, இவ்வாறு பலவகைப் புலன்களும் இயைந்த போதன்றோ எழுகின்றது. இவ்வியைபு, இணைப்பெல்லையிலுள்ள இந்த மேனிலைவட்டங்கள் இல்லையானால் எவ்வாறு எழுதல் கூடும். இவ்வாறே நாம் ஓதும்போது செவிப்புல வெல்லையும், கட்புல எல்லையும் இயக்கவெல்லையும், ஒன்றாகி இயைந்து விளங்கல் காண்க.

உணர்வு என்பது புலப்பொருளை உள்ளுதலேயாம் என முன்னர்க் குறித்துவைத்தோம். அவ்வுணர்வில் புலப்பொருள்களே யன்றி நினைவுப்பொருள்களும் வந்து இயைகின்றன. வெள்ளிய திங்கள் வானகத்தே தண்ணிலவைப் பொழிந்து திகழ்கின்றது. அதனை ஒரு சிறு வெள்ளைவட்டமாக உணர்கையில், கட்புலனே அவ் வுணர்பொருளில் (Percept) மிகுகின்றது. ஆனால் அதிலுள்ள கருநிழலானது, ஓர் ஆலமரத்தடியில் குந்தி அப்பம்சுடும் கிழவி ஒருத்தி என்னை நோக்கிப் பார்ப்பதுபோலத் தோன்றினால் நினைவுப் பொருள் அங்கு மிகுகின்றது.

ஒரு புலனே, பல பொருள்களை மாறிமாறி நமக்கு நினைப்பூட்டுவதும் உண்டு. படிக்கட்டுகளைக் குறிப்பனவாகச் சில கோடுகளை வரைகின்றோம். பெருவகையால் நோக்குமிடத்து அவை வெறும் கோடுகளேயாகும். ஆனால், பொதுவாக அவ்வோவியம் பலர்க்கும் படிக்கட்டையே நினைப்பூட்டுகின்றது. அந்தப் படிக்கட்டின் வடிவமே, ஒருமுறை பார்க்கும்போது மேலிருந்து இறங்கிவரும் படிக்கட்டையும் மற்றொருமுறை கீழிருந்து மேலேறிவரும் படிக்கட்டையும் நினைப்பூட்டுகின்றது. இவ்வாறு பலவேறு உணர்வுகள் எழுந்தாலும் கோடுகளாய்த் தோன்றும் கட்புலனில் ஏதேனும் வேற்றுமைதானுண்டோ? ஒரு சிறிதும் இல்லை. இறங்குகிற நினைவோடும், ஏறுகிற நினைவோடும் அக் கட்புலன் இயைந்து விளங்குவதால் இவ்வேறுபாட்டுணர்வு எழுகின்றது; இறங்கும்போது எழும் இயக்கப்புலனும், அப்போது தோன்றும் படிக்கட்டின் கட்புலனும் முன்னரே மேனிலை வட்டத்தின் வழியாக இயைந்து கிடக்கின்றன. அவற்றின் நினைவு எழும்போது இறங்குபடிகளை உணர்கின்றோம். ஏறும்போது எழும் இயக்கப்புலன்களும், அப்போது தோன்றும் படிக்கட்டின் கட்புலனும் அங்ஙனமே முன்னரே இயைந்துகிடக்கின்றன. அவை நினைவிற்கு வரும்பொழுது ஏறுபடிகளை உணர்கின்றோம். இம் மேனிலைவட்டங்கள் நோயால் கெட்டிருந்தால் கோடுகளைமட்டும் ஒருவன் காண்பானேயன்றிப் படிகளை யுணரான். இவற்றை உணர்வுக் குருடு என்று கூறுவர். ஆகவே உணர்வு என்பது ஒற்றுமைக்காட்சி யாகும்.

நமது துய்த்துணர்வை (Experience) ஆராய்வோமானால், அஃது இவ் வொற்றுமைக்காட்சியாக விளங்குவதைக் காண்போம். பழத் தீநீர் குடித்தபோது, சுவை, குளிர்ச்சி, முதலியவை அனைத்தும் ஒன்றாயியைந்த உணர்வே எழுந்தது. பின்னர்ப் பகுத்துணர்வாலும் முன்னுணர்வாலும் அகக்காட்சி வழியாக நோக்கி ஆராய்ந்து புலன்களை வெவ்வேறு பிரித்தோம். ஆகவே, நெருப்பின் ஒளியும் சூடும் ஒன்றிப் பிரிபடாமல் காணப்படுவதுபோலவே ஒரு பொருளைப்பற்றித் தோன்றும் பல புலன்களும் ஒன்றாகவே எழுகின்றன. செயற்கை ஆராய்ச்சியின் பயனாகவே, இவற்றை வேறுவேறு பிரிக்கின்றோம். நமது துய்த்துணர்வு அவ்வாறு வேறுபட்டு விளங்கவில்லை. ஆகவே புலன்களைத் தனித்தனிப் பொருள்கள் எனக் கொண்டு மயங்குதல் கூடாது.

நமக்கு வெளிப்பொருள்கள் புலன்களாகவே தோன்றுகின்றன. அதனால் அந்தப் புலன்களே அப்பொருள்கள் என வழங்கிவருகின்றோம். ஆனால், புலன்கள், பொருள்களைச் சுட்டும் குறிகளேயாகும். அக்குறியினாற் சுட்டப்படுவதே பொருள் ஆகும். நான் கருவானத்திலெழுந்த வான்மீன்க ளிடையே வெள்ளிக்குடமென விளங்கும் திங்களைக் காண்கின்றேன். வெள்ளை வட்டமொன்றே கட்புலனாகின்றது. கட்புலனாகும் அவ்வெள்ளைவட்டமா வெண்திங்கள்? அச்சிறு வெள்ளைவட்டம் அந்தத் திங்களை அறிவிக்கும் ஒரு அறிகுறியாகும். கட்புலப் பொருள்களைப் பற்றியமட்டுமே, புலனையே பொருள் என்று எண்ணி மருள்கின்றோம். தொலைவில் புகைவண்டி கூவுகிற ஒலியைக் கேட்கின்றேன். அக்கூப்பாடு எனக்குப் புகை

வண்டியை நினைப்பூட்டுகின்றது; அக்கூப்பாடே புகை வண்டி என மருள்வார் இல்லை. அஃது ஒரு குறியே யாகும். முல்லைச் செடியின் அருகே செல்கின்றேன், அம்மலரை நான் கண்ணால் காண்கிறேன் இல்லை. ஆனால் அதன் மணத்தை முகர்கின்றேன். முல்லைப்பூ எனப் பேசுகின்றேன். அம் மணமானது அம் முல்லைப்பூவைச் சுட்டும் அறிகுறியாகின்றது. யானெழுதும் அறைக்குள் வெயில் உறைக்கக் காய்கிறது; அவ்வெப்பம் கதிரவனைச் சுட்டும் குறியேயன்றி அஃதே கதிரவனன்று. ஒரு சொல்லைக்கேட்கின்றேன், அதன் குறிப்பாம் பொருளை உணர்கின்றேன். அச்சொல் அப்பொருள் அன்று; அதனைச் சுட்டும் ஒரு குறியாகும். அங்ஙனமே இப்புலன்கள், பொருளைச் சுட்டும் குறிகளேயாம்.

உலகத்துப் பொருள்கள்:—

இப்புலன்களில் மூன்று நிலைகளைக் காண்கின்றோம். ஒன்று அவற்றின் தன்மைநிலை, இரண்டு அவற்றின் இடநிலை, மூன்று அவற்றின் பொழுதுநிலை என அவற்றை அறிக. அவற்றின் தன்மைநிலையைப் புலன்களை ஆராயும்போது ஆராய்ந்தோம். ஒலி ஒளி முதலியன பலவகையாக வேறுபடுவதனைக் கண்டோம். இத் தன்மைநிலையோடு புலவுணர்வில் பொழுதுநிலையையும் காண்கின்றோம். புலன்கள் உலகில் ஒன்றின் பின்னொன்றாகத் தொடர்ந்து எழுகின்றன அன்றோ? இவ்வாறு தொடர்ந்தெழும்போது பொழுதுநிலையை யுணர்கின்றோம். மாடு என்ற சொல்லில் மா என்ற ஒலியும் டு என்ற ஒலியும் ஒன்றின்பின்னொன்றாகத் தொடர்ந்தெழுந்தால் அப்பெயருடைய பொருளை யுணர்கின்றோம். மா என்றோ டு என்றோ ஒன்றைமட்டும் கேட்போமானால் அப்பொருளை நாம் நினைப்பதில்லை. அவ் விரண்டெழுத்தும் ஒன்றாக இயைந்துவிட்டன. அச்சொல்லைக் கேட்கும்போது அவ்வொலியின் பண்புவேற்றுமைகளை யுணர்வதோடு எழுத்துக்களின் தொடர்பையும் உணர்கின்றோம். இசைவாணன் செவ்வழி முதலிய பண்களைப் பாடுகின்றான். பலவகையான ஒலிகள் பலவகையாகத் தொடர்ந்துவருகின்றன. அவ்வியைபினை உணர்ந்தபோதுதான் இந்தப் பண் இது என உணர்கின்றோம். தொடர்ச்சிஇயைபை உணர்ந்தாலன்றிப் பண்ணை உணர்தல் இயலாது. இவ்வியல்பை உணர்ந்தபோது அப்பண்ணை எக்கருவியில் எழுந்தாலும் உணர்கின்றோம். செவிப்புலவுணர்வில் புலனின் பொழுதுநிலையை உணர்தல் இன்றியமையாதாம். குக்குக்குக், என்று கோட்டான் கூவுகின்றது, அவ்வொலித் தொடர்பை யுணர்ந்தால்தான் கோட்டான் நினைவு எழும். ஊற்றுப்புலனிலும் இப்பொழுதுநிலை காணக்கிடக்கின்றது. தொடர்ச்சியாக இயங்கிவரும்போது முன்னிகழ்ந்தது இது, பின்னிகழ்ந்தது இது என்று உணர்கின்றோ மன்றோ. ஒரு பொருளைத் தொட்டுப் பார்த்தறிதல் என்றால் தொடர்ச்சியாக எழும் பலஊற்றுப் புலன்களை ஒன்றுபடுத்தியன்றோ பார்க்கின்றோம். விரலைத் தடவிப் பார்க்கின்றோம்; முன்தொட்ட பிரிவின் ஊற்றுப்புலனும் பின் தொட்ட பிரிவின் புலனும் தொடர்ந்து இயைந்தன்றோ ஒன்றாகிவிடுகின்றன. இதுவே புலனின் கால வடிவம் என்க.

புலன்கள் இடநிலையும் உடையனவாக விளங்குகின்றன. காற்று வீசினால் முகத்திலும் படுகின்றது, தோளிலும் படுகின்றது. காலிலும் படுகின்றது. வெவ்வேறு இடங்களில் படுவதை அவ்வாறு உணர்கின்றோம். "இரவில் வானத்தைப் பார்க்கின்றேன். ஒன்றைப்போலவே பல வான்மீன்கள் திகழ்கின்றன. தனித்தனியாக அவற்றை வேறுபிரித்தறிய இயலாது, அசுவனிஎன்ற வான்மீன் கூட்டத்தைக் காண்கிறேன். அங்குள்ள ஆறு வான்மீன்கள் ஒரு குதிரைத் தலைபோல இடநிலைபெற்று விளங்குவதைக் காண்கின்றேன். இவ்விடநிலை இயைபை உணர்ந்ததும் அக் கூட்டத்தை நான் மறப்பதில்லை. அந்த ஆறு மீன்களும், குதிரை வடிவாக இடநிலைபெற்று ஒன்றாக இயைந்துவிடுகின்றன. அக் கூட்டத்தை எங்குக் கண்டாலும், இவ்வியைபுணர்வால் நான் கண்டுபிடித்துவிடுகின்றேன். இந்த ஆறுமீன்களில் ஒன்றுக்கொன்றுள்ள நிலைவேற்றுமையை உணர்வதே அதன் இடவடிவை உணர்வதாகும். நான்முனை மும்முனை என்ற வடிவங்களை உணர்வது புலன்களின் இடவடிவை யுணர்வதேயாம். காலவடிவைவிட இடவடிவம் சிறந்து விளங்குகின்றது. புலன்கள் தொடர்ந்தெழுகையில் இடையீட்டின் காலவளவு மாறுமானால் காலவடிவை உணர்வது அருமையாகின்றது. ஆனால், இடவடிவில், இடவளவு மாறினாலும் அதனை நாம் உணர்கின்றோம். அசுவனி என்ற வான்மீன்கூட்டத்தின் ஓவியத்தைப் பெரிதாகவும் எழுதலாம்; மிகச் சிறியதாகவும் எழுதலாம். அம் மீன்களின் இடைநிலை இயைபுமாறாதபோது, அதனை உணர்கின்றோம். நமது நாட்டினைப் பெரிதாகவும் சிறிதாகவும் பல ஓவியங்களில் எழுதியிருக்கின்றார்கள். வடிவ இயைபுதான். மாறாதவரையில் சிறியதாயிருந்தாலும் பெரிதாயிருந்தாலும் அதனை நமது நாட்டின் ஓவியம் என உணர்கின்றோம். இஃது எதனாலாயது? அங்குள்ள பல புள்ளிகளின் இடவடிவாம் அவ்வடிவ இயைபை உணர்ந்ததா லல்லவா அதனை எளிதின் உணர்கின்றோம். இந்த ஓவியத்தில் சென்னைக்கும் தஞ்சைக்கும் உள்ள தொலைவை, ஓரடியாகக் காட்டலாம்; ஒரு விரலளவாகக் காட்டலாம். இடநிலைஇயைபு மாறாதவரையில் நம்முணர்வு மாறுவது இல்லை. ஆனால் புலன்களின் காலவடிவம் அத்தகையதன்று. சொல்லைச் சொல்லத்தொடங்கி, மா என்று ஒரு பொழுதும், பின் ஒரு மணியாய பின்னர் டு என்றும் சொல்லினால், அந்தச் சொல்லை யுணர்வார் யார். ஒருவரும் இல்லை. ஆனால் இடவடிவிலோ பல நூறு நாழி தொலையை ஒருவிரற்கடை யளவாகக் குறுக்கினாலும் வடிவம் மாறாதவரையில் அப்புலன்களைத் தொடர்ந்தறிவோம்.

: : பிரபல ஜோதிஷர் : : மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,
ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[226-வது பக்கத் தொடர்ச்சி]

மூன்றாம் அங்கம்

முதற் களம்

இடம்:—செடிகொடிக ளடர்ந்த பாறைகள் நடுவில்.

[கோரா தன் குழந்தையுடனும், இன்னும் அனேக மாதர்கள் தங்கள் குழந்தைகளுடனும் இருக்கின்றார்கள். ஒருத்திமாற்றி ஒருத்தி தன் நிலையைக்குறித்து உருக்கமாய்ப் பாட எல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து நடுநடுவே பல்லவி பாடி ஓய்கின்றார்]

மரீனா:—இன்னு மொன்றும் தென்படவில்லையா உனக்கு?

ஸாவ்லூகா:—ஆம், இரண்டு பெருவிய ஆட்கள்—குன்றின்மேல் ஒருவனும் — மற்றொருவன் அந்தப் புதரண்டை—

ஒலியா:—இன்னொருவனும் வருகின்றான்—இதோ வந்துவிட்டான். பயந்து மருண்டு வருகின்றானே இவன்!

கோரா:—ஐயோ! என்னிதயம் இம் மார்பை விட்டுக் குதித் தோடிவிடும்போ லிருக்கின்றதே!

[ஓர் போர்வீரன் இரைக்க இரைக்க ஓடிவருகின்றான்.]

மாதர்கள்:—என்ன! மகிழ்ச்சியா, மரணமா?

போர்வீரன்:—காலம் நமக்கு விரோதமா யிருக்கின்றது. அரசன் காயப்பட்டதுமன்றி அவரைச் சிறைபிடித்தும் சென்றுவிட்டார்கள்.

மாதர்கள்:—ஐயோ! குடிகெட்டதே! கடவுளே!

கோரா:—(மெள்ள) ஹூம், அலான்ஸோ?

ஆள்:—நான் பார்க்கவில்லை.

மரீனா:—நமக்கு வேறினி எந்தப்புகலிட மிருக்கின்றது? ஐயோ!

ஒலியா:—இன்னும் மரங்களடர்ந்த இடத்திற்குப் போவோம்.

கோரா:—நான் ஒரு அடி நகரமாட்டேன்.

இரண்டாம் போர்வீரன் (உள்ளே) ஜயம்! ஜயம்!!

(இரண்டாம் போர்வீரன் வருகின்றான்)

மகிழுங்கள்! மகிழுங்கள்! ஜயமடைந்தோம்.

மாதர்கள்:—(குதித்தெழுந்து) வருக! வருக! மங்களதூத—நமது அரசனோ?

இரண்டாம் போர்வீரன்:—அவர் நமது வீரர்களை நடத்திவருகின்றார்.

[அத்தாலிபாவும் ரோலாவும் போர்வீரர்களுடன் வருகின்றார். மாதர்கள் வாழ்த்துப் பாடி அழைக்கின்றார். கோரா கையிற் குழந்தையுடன் அவர்கள்நடுவில் அலான்ஸோவைத் தேடி அலைகின்றாள்]

அத்தாலிபா:—வந்தனம், வந்தனம் குழந்தைகாள்! யாதும் எனக்குத் தீதில்லை. உண்மையே இது. உதிரம் ஒருதரம் நின்றுவிட்டால் அப்புறம் என்ன இருக்கின்றது.

கோரா:—(ரோலாவை நோக்கி) அலான்ஸோ எங்கே? (ரோலா பதிற்சொல்லாமல் ஒருபுறமாய்த் திரும்புகின்றான்) ஐயோ! என் நாதனெங்கே? இப்பாலகனுக்கு அதன் தந்தையைத் தாராய்.

[அத்தாலிபாவின் காலில் விழுகின்றாள்]

அத்தாலிபா:—அலான்ஸோ இங்கு இல்லையே என வருந்துகின்றேன்.

கோரா:—அவரை இனிக் காணவும் நேருமோ?

அத்தாலிபா:— அதற்குத்தான் துதிக்கின்றேன்.

கோரா:—அத்தாலிபா மகாராஜா! அவர் உயிர் துறக்கவில்லையே?

அத்தாலிபா:—இல்லை! அருட்பெருங் கடவுளுக்கு நம் வேண்டுகோள் கேட்டிருக்கும்.

கோரா:—உயிரிழந்தனரோ அவர்—அத்தாலிபா.

அத்தாலிபா:—உயிருடனே இருக்கின்றான்—என் இதயத்தில்.

கோரா:-ஓ அரசனே! என்னை இவ்விதம் வதைக்க வேண்டா. சொல்லிவிடு, இந்தப்பாலகன் தந்தையற்றதாய் விட்டதோ?

அத்தாலியா:—பேதாய், கோரா! எஞ்சிய ஒரு சிறு நம்பிக்கையையும் இவ்விதம் நசுக்கிவிடாதே.

கோரா:—என்ன! சிறு நம்பிக்கையா! ஆயின், நம்பிக்கை சிறிதேனும் உளதோ? (ரோலாவைப் பார்த்து) நீயேனும் சொல்லாயோ ரோலா! பொய்யறியாயே நீ!

ரோலா:—அலான்ஸோவைக் காணவில்லை.

கோரா:—காணவில்லையா! ஐயோ, இதற்கென்ன பொருள்? ரோலா, உண்மையைத்தான் சொன்னாற்றானாகாதோ! தூரத்தில் உருள்கின்ற இடியின் முழக்கத்தைக் கேட்பதைக்காட்டிலும், அது தலையில் விழுந்து பொடியாய்ப் பிதிர்க்கலாமே. ஐயகோ! அவரைக் காணவில்லை என்று சொல்லாது மாண்டுவிட்டார் என்றே சொல்லிவிடேன்.

ரோலா:—அப்படிச் சொல்வது பொய்யாகும்.

கோரா:—பொய்யா! அப்பா! நீ அவ் வார்த்தையைச் சொன்னதற்காக நீடூழி வாழ்க நீ. சுழிபடுதுயரத்துள் மூழ்கும் எனக்கொரு கைகொடுத்துதவல் ரோலா, உன் கடனன்றோ.

[கோராவும் குழந்தையும் ரோலாவைத் தொழுகின்றனர்.]

குழந்தாய்! கைகூப்பிக் கேள். ஒருவேளை என் மரண வேதனையைவிட உனது மடமையே எடுத்துப் பேசலாம்.

ரோலா:— அலான்ஸோவைச் சிறைகொண்டு போயினர்.

கோரா:—சிறைகொண்டு போனாரோ என் நாயகனை! அதுவும் ஸ்பானியர்களா! பிஸாரோவின் கைப்பட்டால்......தெய்வமே! அவருக்கு உயிரோ தினி!

அத்தாலிபா:—இதற்குள் முற்றிலும் மனந் தளர்ந் தழியாதே. அலான்ஸோவை மீட்பதற்கு நம் தேயத்தி லுள்ள திரவியத்தையெல்லாம், ஒருங்குகூட்டி அவ ருக்குப் பிரதிப்பொருளாக இந் நிமிடமே சுமந்து செல்வான் ஒரு தூதன்.

மாதர்கள்:—ஓ! அலான்ஸோவை மீட்பதற்காகவா —எங்களணிகலன்கள்—எங்கள்நவமணிக் குவியல்கள் —எல்லாம் உன் காலின்கீழ், எமதினிய கோரா! அன்பே! இதோ, இதோ, இதோ.

[மாதர்கள் தாங்களணிந்திருந்த ஆபரணங்களைப் பிய்த் தெடுத்து ஆவலுடன் கொடுக்கின்றனர்கள்]

அத்தாலிபா:—ஆம், அலான்ஸோவை மீட்பதற் கென்றால், யார்தான், எதைத்தான் கொடுக்கமாட் டார். சுயநயமற்ற இவர்கள்போன்ற இதயமுள்ள குடிமக்களைக் காக்கப்பெறும் பாக்கியத்தை அளித்த என்கடவுளே—நின்னை எவ்விதம் துதிக்கவல்லேன் யான்.

கோரா:—வேந்தனே! இன்னொரு வேண்டுகோள்— தூதனுடன் நானும் செல்வேன்.

அத்தாலிபா:—கோரா, நீ மனைவியே யன்றி யோர் அன்னையு மாவதை மறக்கலாகாது. உனது மானத்தை யும், அதனுடன் இம் மதலையின் ஆயுளையும், ஆபத் திற் குள்ளாக்காதே. அக்கொடியோர் உனது இளமை யையும் வளமையையும் மடமையையும் உற்று நோக்க நோக்க, அலான்ஸோவைக் கட்டியுள்ள சங்கிலி அதிக மாகவே இறுகும். நீயே அலான்ஸோவின் இதயத்திற் குள் இன்னொரு அம்பு ஏவினவளுமாவாய். கோரா! தூதன் மீளுமளவும் அமைதியாயிரு.

கோரா:—அதுவரையில் உயிர்வைத்திருப்ப தெவ் விதம் என்று உபதேசிக்கவேண்டும்.

அத்தாலிபா:—இப்பொழுது நாமடைந்த ஜயத்திற் காகவும், அலான்ஸோவின் உயிருக்காகவும் அருச்சனை பண்ணிவைக்க ஆலயம் போகின்றோம்; வாருங்கள்.

[எல்லோரும் போகின்றனர்கள்]

இரண்டாங் களம்

இடம்—காடு.

[கோரா குழந்தையுடன் வருகின்றாள்]

கோரா:—யாதுமறியாப் பேதையே! உன் கதி என்ன ஆவ தினி?

[ரோலா வருகின்றான்]

ரோலா:—கோரா, நீ வரச்சொன்ன விடத்திற்கு இதோ வந்திருக்கின்றேன்.

கோரா:—குழந்தாய், ஓ எனதருமை மைந்தா! உனக்குத் தந்தை என்பவர் ஒருவர் இன்னும் உயிருட னிருக்கின்றாரோ?

ரோலா:—கோரா, ரோலா உயிருட னிருக்கும் வரையில் உன் குழந்தை தந்தையற்றதாகுமோ?

கோரா:—மிகவிரைவில் இனித் தாயற்றது மாகும். அலான்ஸோவை இழந்த யான் உயிர் சுமந்திருப்பே னென்று எண்ணுகின்றாயோ!

ரோலா:—இருக்கவேண்டும்! அவர் குழந்தைக் காகவாவது. ஆம், நீ அலான்ஸோவின்மீது ஆசை வைத்திருந்தவளானால், கோரா, அவர்நண்பன் ஒரு வன் சொல்வதைக் கேட்கவேண்டும்.

கோரா:—ஆயின் உலகத்திற்கே செவிகொடுக்கச் சொல்கின்றாய் நீ — அலான்ஸோவுக்கு இவ்வுலகத் தில் நண்பரா யிராதவர் யார்?

ரோலா:—அவர் கடைசி வார்த்தை—

கோரா:—அவர்கடைசி வார்த்தை! (திகைத்துநோக்கி) ஐயோ! என்ன?

ரோலா:—இரண்டு காரியம் என் கைகளில் ஒப்பு வித்தனர் — குழந்தைக்குத் தனது ஆசீர்வாதமும், உனக்கோர் கடைசி விண்ணப்பமும்......

கோரா:—கடைசி விண்ணப்பம்! கடவுளே! கடை சியாமே! ஐயோ! சொல்லிவிடு அதை!

ரோலா:— நா னிறப்பேனாயின்—முதலிலிருந்தே அவருக்கு மாறான எண்ணங்கள் பல தோன்றிக் கொண்டிருந்தன—தானிறந்து விட்டால், கோராவை நான் மனைவியாக்கிக்கொண்டு, தன் குழந்தைக்கும் நான் தந்தையா யிருக்கவேண்டுமென்றும் வற்புறுத் தினார்—நான் ஆகட்டு மென்றேன். பிறகு பிரிந் தோம். கேள், கோரா, இதை யுனக்குச் சொல்வது அலான்ஸோவுக்கு நான் வாக்களித்திருப்பதினால் தான். என்வரையிலோ நான் அதைப் பாராட்டவு மில்லை—உரிமை கொண்டாடவுமில்லை—நிறை வேறு மென்கின்ற நம்பிக்கையு மில்லை.

கோரா:—ஹா! எனக்கு என்ன! மனத்தடுமாற்ற மா? அல்லது, என் புத்தியிற் பாய்கின்ற கொடிய சங்கை யிது எங்கிருந்து உதிக்கின்றது? ஓ! அலான் ஸோ! உனது கரவற்ற மனத்திற்கே நீ இரையாயினை போலும். நீ மாத்திரம் ஒன்றுஞ் சொல்லாமற் சென் றிருப்பாயாயின்— இக் கடைகெட்ட எனது சவுந் தரியத்தை மரணசாசனம்மாத்திரம் வரையாமற் சென் றிருப்பாயாயின்—என் பிராணநாத!

ரோலா:—கோரா! என்ன கொடிய சந்தேகம் பிடித் துக்கொண்டதுன்னை.

கோரா:—ஆம்! ஆம்! தெரிந்துவிட்ட திப்பொழுது! நீ வைத்த வஞ்சனைப்பொறியில் வாளா அகப்பட்டுக் கொண்டுவிட்டனர். பாழிடத்திற்கு வருந்தி யழைத் துக் கொலையாளிகளையும் ஏவினையோ, பாதகா! செத் தார்—வீணே உதவிக்கு ரோலாவைக் கதறி யழைத் தார். நீ மறைந்திருந்து சிரித்து நின்றாய். நீ அவரைக் காப்பாற்றியிருக்கலாம்—இருக்கலாம்—ஆனால் செய்ய வில்லை.

ரோலா:—ஓ! எரிந்துபோகும் ஈசனே! இதற்கு நான் பாத்திரனே! கோரா, இதைவிட இவ்வாளை என் மார்பினுள் செலுத்திக்கொள்ளக் கட்டளையிட்டு விடு.

கோரா:—வேண்டா!—சாகாதே!—காதலுக்காக உயிர்வைத்திரு!—நீ விழைகின்ற அக்காதலுக்காக! இக்காதல், உயிரென் றெண்ணியிருந்த ஒரு நண்ப னைக் காட்டிக்கொடுத்து, அவன் புதையுண்ட கல்ல றையிலேயே, வேரூன்றித் தளிர்விட்டு மலரவும் வேண்டுமோ! சே! விசுவாசகாதகா! ஆனால் அலான் ஸோவின் அந்தியகால வார்த்தையை எனக்குச் சொன் னாய். என்னுடையவைகளையும் கேட்டுவிடு: துன்பம் நிறைந்த இம்மார்பில் விடந்தடவி இம்மகவிற்குப் பாலூட்டினும் ஊட்டுவேன்—என் நாதனுடனின்று போர்புரிந்து உயிர்நீத்த ஓர் அற்பச் சேவகன்தன் சவத்தைத் தழுவினும் தழுவுவேன்—ஒருபோதும் இக்குழந்தை ரோலாவை 'அப்பா' வென் றழையாது; நானும் அவனை 'நாதா' வென்றழைக்கமாட்டேன்.

ரோலா:—சரி, நான் இதுகாறும் யாவனோ அவனே யென்றழைத்திடுக, கோரா—உனது நண்பன், உனது காவலன்.

கோரா:— (வெறிகொண்டு) சே, போ! எனக்குக் கட வுளன்றி வேறோர் காவலரும் வேண்டாம்! கையிற் குழந்தையுடன் நான் போர்க்களம் செல்கின்றேன் இதோ: இக் கைகளாலேயே, எனது இனிய மணவாளன் திருமுகந் தென்படுமட்டும், ஒவ்வொரு பிணத்தை யும் புரட்டிப் பார்க்கின்றேன். தொண்டை கிழிகின்ற வரையில் அவர் திருநாமத்தைக் கதறி யழைக்கின் றேன். நீங்கா வுயிர் சிறிது அவர் உடலிலிருக்குமாயின் முகவாசையற்ற தன் கண் திறந்து—தன் கோராவின் குரல் தெரியாதா அவருக்கு—என்னை வாழ்த்துவார் என்பதற் கையமில்லை. அங் ககப்படாவிட்டால், குழந்தாய், நாம் ஸ்பானியர் கூடாரத்திற்குப் போவோ மடா! உனது பார்வை ஒன்றே போதுமே! ஆயிரம் வாட்கள் நடுவிலும் நம்மைத் தீண்டாது விட்டுவிடு வார்கள். அவர்களும் மனிதர் தானே! இரத்தம் பெருகத் தரைசாய்ந்துகிடக்குந் தனது காதலனைத் தேடித் திகைக்கும் மனைவியைத் துரத்தும் கன்மனத் தவர்கள் உளரோ! சிறைப்பட்ட தந்தைக் கழுமொரு பாலனையுமா கருதார்? இல்லை, இல்லை நாமெங்கே போனாலும் தீதொன்று மில்லையடா குழந்தாய். துக்க முற்ற தாயொருத்திக்குத் தன் கையி லிருக்கும் திக் கற்ற குழந்தையே உலகத்தில் தடையின்றி எங்கும் இயங்க இயற்கைத் தேவி யளித்த பயணச்சீட்டா கும். ஆம், ஆம், கண்ணே, நாம் போய் உன் தந்தை யைத் தேடுவோம் வா.

[குழந்தையுடன் போகின்றாள்]

ரோலா:—(சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு) நீ இட்ட வசைகளில் எள்ளளவிற்கேனும் நான் பாத்தி ரனா யிருப்பேனாயின், கோரா, நாயினும் கடையேனுக் குப் பாழ்நரகம் பெருவாய் திறந்து காத்துக்கொண் டிருக்கின்றது. அவள் தன்னை ஆபத்திற் காளாக்கிக் கொள்ளாம லிருக்க வேண்டுமே. என்ன செய்வது —பிறகு அவளெனக்குப் பெருந்தீங் கிழைத்துளாள் என்பதைக் காட்டித்தருவேன்.

(போகின்றான்)

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[231-வது பக்கத் தொடர்ச்சி]

3. குமாரகாலச் சருக்கம்.

வேறு.

110. கங்குல்வாய்க் கனவவன் கருதிச் சொற்றது
மங்கலப் பெரும்பயன் வகுத்த வண்ணமுங்
கொங்கலர் தெரியலான் கூறிக் கொய்ம்மலர்த்
தொங்கலார் நெடுமுடி சுடரத் தூக்கினான். 42.

(மந்திரசாலை சேர்ந்தபின்) கொங்கு அலர் தெரிய லான் - வாசனை வீசுகின்ற மாலையை அணிந்த பயா பதி யரசன், கங்குல்வாய் - முன்னாளிரவில் தான் கண்ட, கனவு - கனவை, அவன் - அந்நிமித்தகன், கருதிச்சொற்றதும் - தெரிந்து சொன்னதும், மங் கலம் பெரும் பயன் - மங்களமான அதன் பெரிய பயனை, வகுத்த வண்ணமும் - அந்நிமித்தகன் விளக் கிய விதத்தையும், கூறி - மந்திரி முதலானவர்களுக் குச் சொல்லி, கொய் மலர் - கொய்த மலர்களால் தொடுத்த, தொங்கல் - மாலை, ஆர் - பொருந்திய, நெடுமுடி - தன் பெரிய கிரீடம், சுடர - பிரகாசிக் கும்படி, தூக்கினான் - (தலையை அசைத்துக்கொண்டு மேலினிச் செய்வது என்னென வினவி) ஆராய்ந் தான்.

கொங்கு அலர்—என்பதற்குத் தேன் சொரிகின்ற என்றும் பொருள் கொள்ளலாம். தூக்கினான், என்ப தற்குத் தலைநிமிர்ந்தான் என்ற பொருளும் பொருந் தும். அல்லது, தூங்கினான் என்பது வலித்தல் விகா ரத்தால், தூக்கினான் என ஆகித் தங்கினான் (அமர்ந் தான்) எனப் பொருள் தரினுந் தரலாம்.

111. சூழுநீ ருலகெலாந் தொழுது தன்னடி
நீழலே நிரந்துகண் படுக்கு நீர்மையா
னாழியங் கிழவனா யலரு மென்பது
பாழியந் தோளினாய் பண்டுங் கேட்டுமே. 43.

(இது கேட்ட மந்திரி முதலாயினோர்)—"சூழும் நீர் உலகு எலாம் - நீர் சூழ்ந்த உலகத்திலுள்ளவர்க ளெல்லாம், தொழுது - வணங்கி, தன் அடி - தன் பாதங்களின், நீழலே - நிழலிலேயே, - நிரந்து - நிறைந்து, கண்படுக்கும் - அமைதியுடன் தங்கியிருக் கும், நீர்மையான் - தன்மையை உடையவனாகிய திவிட்டன், ஆழி அம் கிழவன் ஆய்-சக்கிராயுதத்தை ஏந்திய திருமாலேயாகி, அலரும் என்பது - விளங்கு வான் என்பது, பாழி அம் தோளினாய் - வலியமைந்த அழகிய தோள்களை உடைய அரசனே, பண்டும் - இதற்கு முன்னும், கேட்டும் ஏ - நாங்கள் கேட்டிருக் கின்றோம்—(எனக்கூறினார்).

கண்படுத்தல் - தூங்குதல், கவலையின்றி அமர்ந் திருத்தல், நிரப்பு என்பதற்குச் சோம்பல் என்றபொரு ளும் இருத்தலால், நிரந்து கண்படுக்கும்; என்பது யாதும் கவலையும் அல்லலு மின்றிச் சோம்பலுடன் அமர்ந்திருக்கும் உலகத்தின் அமைதியைக் குறிக் கும்.

ஆழியம் கிழவன் - சக்ரவர்த்தியுமாம். திவிட்டன் பின்னர்த் தான் சக்ரவர்த்தியாவான் என்பதை யாம் முன்னரே கேட்டிருக்கின்றோம், என்று மந்திரிகள் கூறியதாகவுங் கொள்ளலாம். கேட்டும் - தன்மைப் பன்மை இறந்தகால வினைமுற்று.

112. நற்றவ முடையனே நம்பி யென்றபூண்
விற்றவழ் சுடரொளி விளங்கு மேனியக்
கொற்றவன் குறிப்பினை யறிந்து கூறிய
மற்றவர் தொடங்கினர் மந்திரத் துளார். 44.

பூண் - ஆபரணங்களின், வில் தவழ் - ஒளி பரவுகின்ற, சுடர் ஒளி விளங்கு மேனி - சூரியன் போன்ற பிரகாசம் விளங்குகின்ற சரீரத்தை உடைய, அ கொற்றவன் - அந்தப் பயாபதியரசன், நம்பி-திவிட்டன், நல் தவம் உடையனே - நல்ல தவப்பேறு உடையவனே, என்று - என்று எண்ணிய, குறிப்பினை - கருத்தை, மந்திரத்து உளார் அவர் - ஆலோசனை சபையிலிருந்த அவர்கள், அறிந்து-தெரிந்துகொண்டு, கூறிய-மேலே சொல்வதற்கு, தொடங்கினர்-ஆரம்பித்தார். (பற்று—ஆசை).

"சக்கிரப்படையுடைய திருமாலாய் இம்மைந்தன் அலர்வான் எனக்கேட்டிருக்கின்றோம்" என்று மந்திரிமார் சொல்லவும், அரசன், அபிமானத்தால் மிகைபடக் கூறிய மொழி அதுவெனக்கொண்டு, நற்றவம் உடையவன் நம்பி என்ற மட்டுமே கருதலாயினன். அக்குறிப்பை அறிந்த மந்திரிகள், இத்திவிட்டன் திருமாலே என்பதை வற்புறுத்தச் சான்றுகள் கூறத் தொடங்கினர்—என்பது இச் செய்யுளின் பொருள்.

கூறிய, காணிய சொல்லிய என்பனபோல், செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்.

—

வேறு.

113. சங்க லேகையுஞ் சக்ர லேகையு
மங்கை யுள்ளன வையற் காதலால்
சங்க பாணியான் சக்கி ராயுத
மங்கை யேந்துமென் றறையல் வேண்டுமே. 45

ஐயற்கு-மேன்மகனாகிய திவிட்டனுக்கு, சங்கலேகையும் - சங்க இரேகையும், சக்ரலேகையும்-சக்கிர இரேகையும், அம்கை உள்ளன - அழகிய கைகளில் இருக்கின்றன. ஆதலால் - ஆகையால், சங்கபாணியான் - சங்கைக் கையிலுடைய திருமாலின், சக்கிராயுதம் - சக்கிராயுதத்தை, அம்கை ஏந்தும் (இந்தத் திவிட்டன் தன்) அழகிய கையில் ஏந்துவான், என்று அறையல் வேண்டும் - என்று சொல்லவேண்டும்—(என மந்திரிமார் உரைத்து மேலுங் கூறுவார்).

—

வேறு.

114. விஞ்சைய ருலகுடை வேந்தன் றன்மகள்
வஞ்சியங் கொடியிடை மயிலஞ் சாயலா
ளெஞ்சலின் றியங்கிவந் திழியு மாய்விடி
லஞ்சிநின் றிவ்வுல காட்சி செல்லுமே. 46.

விஞ்சையர் உலகுடை வேந்தன்தன் - வித்தியாதரர் உலகத்தின் வேந்தனது, வஞ்சி அம் கொடி இடை - வஞ்சிக்கொடியைப்போன்ற அழகிய இடையையும், மயில் அம் சாயலாள் - மயிலைப்போன்ற அழகிய சாயலையும் உடையவளாகிய, மகள் - பெண், எஞ்சல் இன்று - குறைவின்றி, இயங்கி வந்து - ஒளியுடன் உலவிவந்து, இழியும் ஆய்விடின்-(திவிட்டனை மணம் செய்துகொள்ளும் பொருட்டுப் பூமியில்) இறங்குவாளானல், இவ்வுலகு-இவ்வுலகம், அஞ்சி நின்று (உன்னுடன் பகைகொள்வதற்கு) பயந்து நிற்க, ஆட்சி செல்லும் - உன்னுடைய ஆட்சி நடக்கும். (என்றனர் மந்திரிகள்).

வித்தியாதர வேந்தனுடைய உறவும் உனக்கு வாய்க்குமாயின் நின்னுடன் பகைகொள்ளவும் இவ்வுலகின்கண் ஒருவரும் துணியாராகி உன்னுடைய ஆட்சி நிலைபெற்று நடக்கும்—என்பது இச் செய்யுளின் கருத்து.

—

115. நாமினி மற்றவன் மொழிந்த நாளினுற்
றேமரு சிலாதலந் திருத்தித் தெய்வமாந்
தூமரு மாலையாய் துரும காந்தனைக்
காமரு பொழிலிடைக் காவல் வைத்துமே. 47.

தெய்வம் ஆம் தூ மரு மாலையாய் -தெய்வத்தன்மை பொருந்திய பரிசுத்தமான மணமமைந்த மாலையை அணிந்தவனே—அவன் - அந்நிமித்தகன், மொழிந்த-சொன்ன, நாளினுல் - நாளில், தேம்மரு - வாசனை அமைந்த, சிலாதலம்-கல்மேடை, திருத்தி-அமைத்து, காம் மரு பொழில்இடை - அழகிய புஷ்பமாகாண்டம் என்னும் சோலையில், துருமகாந்தனை - துருமகாந்தன் என்பவனை, காவல் வைத்தும் - வித்தியாதரதூதனது வருகையைத் தெரிந்து நமக்கு உரைக்கும்படி காவல் வைப்போம்.

—

116. என்றவர் மொழிந்தபி னிலங்கு பூணினு
னன்றது பெரிதுமென் றருளி நாடொறுஞ்
சென்றவன் காக்கென மொழிந்து தேங்குழ
லின்றுணை யவர்கடங் கோயி லெய்தினன். 48.

என்று அவர் மொழிந்தபின் - என்று மந்திரிமார் கூறிய பிறகு, இலங்கு பூணினன் - இலங்குகின்ற ஆபரணங்களை அணிந்த பயாபதி வேந்தன், நன்று அது பெரிதும் என்று அருளி - இவர் சொல்லியது மிகவும்தக்கதே என்று சொல்லியருளி, நாள்தொறும்-ஒவ்வொரு நாளும், அவன் சென்று - அந்தத் துருமகாந்தன் சென்று, காக்க (சோலையில்) காவல்புரிக, என மொழிந்து - என்று கட்டளையிட்டு, தேன் குழல் - தேன் பொழிகின்ற கூந்தலையுடைய தன், இன் துணையவர்கள்தம்-இனிய மனைவியர்களது, கோயில்-அந்தப்புரத்தை, எய்தினன் - அடைந்தான்.

காக்க+என, என்பது செய்யுள் விகாரத்தால், நிலைமொழியீறு கெட்டுக் காக்கென, என்று புணர்ந்தது. தேன்+குழல் - தேங்குழல்.

—

117. எரிபடு விரிசுட ரிலங்கு பூணினன்
றிருவடி தொழுதுசெல் துரும காந்தனும்
வரிபடு மதுகர முரல வார்சினைச்
சொரிபடு மதுமலர்ச் சோலை நண்ணினன். 49.

எரிபடு - நெருப்பைப்போன்ற, விரிசுடர் - விரிகின்ற ஒளி, இலங்கு - பிரகாசிக்கின்ற, பூணினன் - ஆபரணங்களை அணிந்த அரசனுடைய, திரு அடி - அழகியபாதங்களை, தொழுது செல்-வணிங்கிஅகன்ற, துருமகாந்தனும்-துருமகாந்தனும், வரிபடு- கோடுகள் அமைந்த, மதுகரம் - வண்டுகள், முரல - ஒலிக்கும்படி, வார் - நீண்ட, சினை - கிளைகளிலிருந்து, சொரிபடு - சொரிகின்ற, மது-தேனையுடைய, மலர்ச்சோலை-மலர்கள் நிறைந்த புட்பமாகாண்டம் என்னும் சோலையை, நண்ணினன் - சேர்ந்தான்.

குமாரகாலச்சருக்கம் முற்றிற்று.

யாப்பிலக்கணம்

தளை

[232-வது பக்கத் தொடர்ச்சி]

வஞ்சித்தளை.

மூவசைச் சீர்களில், காய்ச்சீர் கனிச்சீர் என இருவகை இருப்பதை முன் கண்டோம். நேரசையை ஈற்றிலுடையதாய்க் காய் என்னும் வாய்பாட்டில் வருபவை காய்ச்சீரெனப்படும் என்றும், மூவசைச்சீர்களில் வெண்பாவில் வரக்கூடியவை இக் காய்ச்சீர்களே யாதலால், அச்சீர்களுக்கு வெண்பாஉரிச்சீர் அல்லது வெண்சீர் என்னும் பெயர் வந்ததென்றும், இக் காய்ச்சீர், வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினல் வெண்டளையும், ஒன்றுவிடில் கலித்தளையும் ஆவதையுங் கூறினேம்.

இனி, மூவசைச்சீர்களில், தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரையீற்றுச்சீர்கள் நான்கும் கனிச்சீர் என அழைக்கப்படுவதோடு பெரும்பாலும் வஞ்சிப்பாவிற்கு இவை உரியதாயிருத்தலால், வஞ்சி யுரிச்சீர் என்னும் பெயரும் பெற்றன.

நிலைச்சீர், கனிச்சீர் என்னும் இவ் வஞ்சிஉரிச்சீர் ஆமாயின் வருஞ்சீர் எதுவாயினும், அமைவது வஞ்சித்தளையே:—

மழைமுகிலென குழல்விரிதரு-
கலைவீழ்தரு நன்மடவார்—
பானுரையன துகில்சேர்—
கண்பார்வையைப் போக்கி—
} வஞ்சித்தளைகள்.

இவ் வுதாரணங்களில், நிலைச்சீர் நால்வகைக் கனிச்சீர்களாயுமிருக்க வருஞ்சீர் நிரையசையையேனும் நேரசையையேனும் முதலிலுடைய மூவசைச்சீர்களாகவேனும் ஈரசைச்சீர்களாகவேனும் இருக்கக்காண்கின்றீர். ஆதலின், நிலைச்சீர்மாத்திரம் கனிச்சீராயிருந்துவிடுமானல், வருஞ்சீரும் அதன் முதலசையும் எதுவாயிருப்பினும் வஞ்சித்தளை அமையும் எனக் கொள்க.

கனிச்சீரிற்குப் பின் வருஞ்சீரின் முதலசை நிரையசையாகநின்று ஒன்றினும், நேரசையாக நின்று ஒன்றுவிடினும் விஞ்சித்தளையாகும் என்பதிலிருந்து வஞ்சித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றுத வஞ்சித்தளை என இருவகைப்படும் என்பது தெரியவரும். இனி இவ்விருவகையிலும், வருஞ்சீரும் கனிச்சீராமாயின், அது சிறப்புடைவஞ்சித்தளையும், கனிச்சீரல்லாத மற்றச்சீர்களாமாயின் சிறப்பில்வஞ்சித்தளையும் ஆகுமென்றும் அறிக.

நிலைச்சீர்	+	வருஞ்சீர்	=	தளை.
தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி	+	கருவிளங்கனி புளிமாங்கனி		சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை
		புளிமா கருவிளம் கருவிளங்காய் புளிமாங்காய்		சிறப்பில் ஒன்றிய வஞ்சித்தளை
		கூவிளங்கனி தேமாங்கனி		சிறப்புடை ஒன்றுத வஞ்சித்தளை
		தேமா கூவிளம் கூவிளங்காய் தேமாங்காய்		சிறப்பில் ஒன்றுத வஞ்சி[illegible]

இப்பொழுது ஒரு செய்யுள் வரைந்து அதன்கண் வஞ்சித்தளைகள் அமைந்தவாற்றைக் காணலாம்:—

அஞ்சம்பையு மையன்றன தலகம்பையு மளவா
நஞ்சங்களை வெலலாகிய நயனங்களை யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலுங்
கஞ்சங்களை மஞ்சன்கழ னகுகின்றது கண்டாள்.

[மன்மதனது ஐந்து பாணங்களையும், இராமனது அலகு உடைய அம்பையும் (தம் கூர்மையால்) அளந்து, விஷங்களை யெல்லாம் (தம் கொடுமையால்) வெல்கின்ற கண்களையுடைய சீதாபிராட்டி, களிப்புடன் தூங்குகின்ற வரிகளையுடைய வண்டுகள், புள்ளாங்குழல்போல் ஒலித்துச் சுழலப்பெற்ற தாமரைமலர்களை இராமனது பாதங்கள் பரிகசித்துச் சிரிப்பதைக் கண்டாள்]

அஞ்சம்பையு மையன்றன—தேமாங்கனி+தேமாங்கனி=நிலைமொழி கனிச்சீராயிருப்பதால் இது வஞ்சித்தளை. வருஞ்சீர் முதலில் நேரசை யிருத்தலால் இது ஒன்றுத வஞ்சித்தளை. இரண்டு சீர்களும் கனிச்சீர்களாயிருத்தலால் இது சிறப்புடை வஞ்சித்தளை—ஆதலின் இது சிறப்புடை ஒன்றுத வஞ்சித்தளை.

மையன்றன தலகம்பையு=தேமாங்கனி + புளிமாங்கனி=இரண்டுசீர்களும் கனிச்சீர்களா யிருத்தலால் இது சிறப்புடை வஞ்சித்தளை. வருஞ்சீர் முதலிலும் நிரையசை யிருத்தலால் இது ஒன்றிய வஞ்சித்தளை—ஆதலின், சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை.

தலகம்பையு மளவா=புளிமாங்கனி + புளிமா=நிலைச்சீர் கனிச்சீராயிருத்தலால் இது வஞ்சித்தளை. வருஞ்சீர் முதலிலும் நிரையசை யிருத்தலால் இது ஒன்றிய வஞ்சித்தளை. ஆனல், வருஞ்சீர் கனிச்சீராயிராமல் ஈரசைச்சீராயிருத்தலால் இது சிறப்பில் வஞ்சித்தளை—ஆதலால், சிறப்பில் ஒன்றிய வஞ்சித்தளை.

நஞ்சங்களை வெலலாகிய = தேமாங்கனி+புளிமாங்கனி=சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை.

வெலலாகிய நயனங்களை=புளிமாங்கனி+புளிமாங்கனி=சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை.

நயனங்களை யுடையாள் = புளிமாங்கனி+புளிமா=சிறப்பில் ஒன்றிய வஞ்சித்தளை.

துஞ்சுங்களி வரிவண்டுகள் = தேமாங்கனி+புளிமாங்கனி=சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை.

வரிவண்டுகள் குழலின்படி = புளிமாங்கனி + புளிமாங்கனி=சிறப்புடை ஒன்றிய வஞ்சித்தளை.

குழலின்படி சுழலும் = புளிமாங்கனி + புளிமா=சிறப்பில் ஒன்றிய வஞ்சித்தளை.

கஞ்சங்களை மஞ்சன்கழ = தேமாங்கனி + தேமாங்கனி = இரண்டு சீர்களும் கனிச்சீர்களாயிருத்தலால் இது சிறப்புடை வஞ்சித்தளை. ஆனல் வருஞ்சீர் முதலில் நேரசை யிருத்தலால் இது சிறப்புடை ஒன்றுத வஞ்சித்தளை.

[illegible]ன்றது = தேமாங்கனி+புளிமாங்கனி=[illegible]ன்றிய வஞ்சித்தளை.

18891

னருகின்றது கண்டாள் = புளிமாங்கனி + தேமா = நிலைச்சீர் கனிச்சீராயிருத்தலால் இது வஞ்சித்தளை. வருஞ்சீர் கனிச்சீரின்றி இயந்சீராயிருத்தலால்இது சிறப்பில் வஞ்சித்தளை. வருஞ்சீர் முதலில் நேரசை இருத்தலால் இது ஒன்றாத வஞ்சித்தளை—ஆதலின் இது சிறப்பில் ஒன்றாத வஞ்சித்தளை.

மேற்குறித்த செய்யுளில் வஞ்சித்தளை பயின்றிருக்கின்றதேனும் அது வஞ்சிப்பாவன்று. வெண்பா தவிர மற்றப்பாக்களில் வஞ்சித்தளையும், மற்றத்தளைகள் வஞ்சிப்பாவிலும் வரலாமெனினும் பெரும்பாலும் வஞ்சித்தளை வஞ்சிப்பாவிற்குரியதாகும். கீழ் வருவது வஞ்சிப்பா:—

பொருள்செறியுரை புகல்வளத்தவன்
அருள்சொரிதரு மகமுடையவன்
பகையிலையெனும் புகழுடையவன்
மிகவிரைவினிற் பிழைபொறுப்பவன்
செல்வம்வரவர வளித்திடுபவன்
நல்குறவுற நகைபுரிபவன்
அவனே
மன்பதைத் தொகுதி மாநிலந் தன்னுள்
நன்னய முணர்ந்தோ னாகிப்
பன்னருஞ் சிறப்பில் வாழ்ந்தவ னெனவே.

[பொருட்செறிவுடைய மொழிகளையே பேசும் வளப்பம் உடையவன்; அருள் சொரிகின்ற இதயத்தை யுடையவன்; இவனுக்குப் பகைவர் யாவரும் இல்லையென்னும் புகழை யுடையவன்; பிறர் செய்த பிழைகளை மிக விரைவில் மறந்துவிடும் குணமுடையவன்; செல்வம் வரவர அதனை உடனுக்குடனே மற்றவர்க்குக் கொடுத்துவிடுபவன்; தனக்கு வறுமை வந்தகாலத்து அதற்கு உடைந்துவிடாமல் நகுகின்ற நெஞ்சத்திட்பம் உடையவன்—அவனே, மனிதர்கள் வாழும் இப்பெரிய உலகில் நல்ல பயனை உணர்ந்தவனாகிச் சொல்வதற்கரிய சிறப்போடு வாழ்ந்தவன் எனற் குரியவன்]

பொருள்செறியுரை என்பதுமுதல் நகைபுரிபவன் என்பது வரையிலுள்ள பன்னிரண்டு சீர்களும் கனிச்சீர்களாகி ஒன்றிய சிறப்புடை வஞ்சித்தளையால் பொருந்துகின்றன. மற்றை மூன்றடிகளும் ஆசிரிய அடிகளாதலால் அவை ஆசிரியத்தளை யமைந்து நடக்கின்றன.

இதுகாறும் உரைத்தவைகளினின்று, ஆசிரியத்தளை வெண்டளை கலித்தளை வஞ்சித்தளை என்னும் இந் நான்கு தளைகளும் ஏழு வகைகளாய்ப் பிரியுமென்பது உணரலாகலாம்:—

1. நேரொன்றிய ஆசிரியத்தளை:—நிலைச்சீர் நேரசையை ஈற்றிலுடைய இயற்சீராக, வருஞ்சீர் முதலிலும் நேரசை நிற்றல்:—

காமற் கடந்த வாமன் பாதம்.

2. நிரையொன்றிய ஆசிரியத்தளை:—நிலைச்சீர் நிரையசையை ஈற்றிலுடைய இயற்சீராக, வருஞ்சீர் முதலிலும் நிரையசை நிற்றல்.

எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி.

3. வெண்சீர் வெண்டளை:—நிலைச்சீர் காய்ச்சீராக, வருஞ்சீர் முதலில் நேரசை நிற்றல்—

பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்.

4. இயற்சீர் வெண்டளை:—நிலைச்சீர் நேரீற்று இயற்சீராயின், வருஞ்சீர் முதலில் நிரையசை நிற்றலும்; நிலைச்சீர் நிரையீற்று இயற்சீராயின் வருஞ்சீர் முதலில் நேரசை நிற்றலும்:—

இல்லா விடத்து மியைந்த வளவினால்.
தொல்வலி யாற்றிய தூணுறழ் தோளினர்.

5. கலித்தளை:—நிலைச்சீர் காய்ச்சீராக, வருஞ்சீர் முதலில் நிரையசை நிற்றல்:—

மணிபோல வரும்பூழ்த்து மரமெல்லா மலர்வேய.

6. ஒன்றிய வஞ்சித்தளை:—நிலைச்சீர் கனிச்சீராக, வருஞ்சீர் முதலிலும் நிரையசை நிற்றல்:—

மதிபுரையொளித் திருமுகமதிற் கயல்புரள்தர.

7. ஒன்றாத வஞ்சித்தளை:–நிலைச்சீர் கனிச்சீராக வருஞ்சீர் முதலில் நேரசை நிற்றல்.

தேன்வழிதரும் பூமணங்கமழ் கார்ப்பொழிலிடை

இங்குக் காட்டிய உதாரணங்கள் அவ்வத் தளைகளில் சிறப்புடையனவாகும். நிலைச்சீரும் வருஞ்சீரும் ஒரே இனத்தைச் சேர்ந்தனவாயின் அவைகளுக்கிடையே அமையுந் தளை சிறப்புடைத்தளை யெனவும், வேறுவேறாயின் சிறப்பில்தளை யெனவும் அழைக்கப்படுவதையும் அவைகளுக்குரிய உதாரணங்களையும் முன்னர்க் கூறியிருக்கின்றோம்.

ஈரசை, மூவசைச் சீர்களுக்கிடையே அமைகின்ற தளைகளை மாத்திரஞ் சொல்லிவந்துளோமாதலின், அசைச்சீர் எனப்படும் ஓரசைச்சீரும், பொதுச்சீர் எனப்படும் நாலசைச் சீர்களும் நிலைச்சீர்களாயின் அமையுந் தளையை எத்தளை எனக்கொள்வது எனும் ஐயம் எழுவது இயல்பே.

ஓரசைச்சீர் நிலைச்சீராகச் செய்யுள்களில் நிற்பதென்பது மிகவும் அருமை. வெண்பாவின் ஈற்றுச் சீராக நிற்பதே பெரும்பாலும் ஓரசைச் சீரிற்கு உரிய இடமாயிருத்தலால் அதன்பின் வேறோர் சீர் வருவதற்கில்லை—ஆதலின் தளையும் அமைவதற்கில்லை. எனினும் செய்யுள்களின் இடையேயும் மிகவும் அருகி ஓரசைச்சீர்கள் வருமெனக் கொள்வாரும் உளர்:—உதாரணமாக,

உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற வென்பவே.

என்னுஞ் செய்யுளை அலகிடுங்கால், மழைக், என்பதும் செய் என்பதும் ஓரசைச்சீர்களாய் நிற்கநேர்கின்றன. அப்படி நிற்கநேர்கின்றபோது, அத் தனியசையை ஒரு ஈரசைச்சீரின் ஈற்றசைபோல் பாவித்துத் தளை அதற்கேற்றவாறு இன்னதென்று இயம்புதல் வேண்டும். இச் செய்யுளில், மழைக்' என்னும் அசைச்சீர் ஓர் இயற்சீரின் ஈற்றசையாமாயின், இது நிரையசையாயிருக்க, 'கண்ணாள்' என்னும் வருஞ்சீர் முதலில் நேரசை நிற்றலால், இயற்சீர் வெண்டளை விளைந்ததென்க. மூன்றாவதடியில் இருக்கும் செய் என்னும் அசைச்சீர், ஒரு இயற்சீரின் ஈற்றசை ஆமாயின், நிலைச்சீர் ஈற்றில் நேரசையாயிருக்க, 'தீமையால் என்னும் வருஞ்சீர் முதலிலும் நேரசையே நிற்றலால், நேரொன்றிய ஆசிரியத்தளை என்க.

ஓரசைச்சீர்களை ஈரசைச்சீர்களாகப் பாவித்ததுபோலவே, நிலைச்சீராயிருக்கும் நாலசைச்சீர்களை மூவசைச்சீர்கள்போல் பாவித்து அதற்கேற்றவாறு தளை இன்னதென்று தேர்ந்துகொள்க. நிரையசையை ஈற்றிலுடைய பொதுச்சீரை, கனிச்சீராகப் பாவித்து அதற்குப் பின்வரும் சீர் எதுவாயினும் வஞ்சித்தளை அமையுமென்று கொள்ளல்வேண்டும்:—

இருள்செறிபொழிலிடை மணம்விரிய—
ஒன்றியவஞ்சித்தளை
புதுமணம்புகுமொரு மாதிவள்—
ஒன்றாத வஞ்சித்தளை.

நேரசையை ஈற்றிலுடைய பொதுச் சீரைக் காய்ச்சீராகப் பாவித்து, வருஞ்சீர் முதலில் நிரையசை நிற்குமாயின் அமைவது கலித்தளை எனக் கொள்க:—

நாண்மலரோதி வனிதையர்—கலித்தளை.

நேரசையை ஈற்றிலுடைய பொதுச்சீரைக் காய்ச்சீராகப் பாவித்து வருஞ்சீர் முதலிலும் நேரசை நிற்குமாயின் அமைவது வெண்டளை எனக் கொள்க.

புகர்முகயானைப் பாகன்போல—வெண்டளை.

குறிப்பு:—நிலைச்சீர் வெண்சீரலதாதலின் இதனை வெண்சீர்வெண்டளை என்பதற்கில்லை—பொதுச்சீர் வெண்டளை எனலாம் போலும்.

———

தனிப்பாடல்கள்

[யாழ்ப்பாணம். திரு. க. சோமசுந்திரம் பிள்ளை.]

நாமகள் - அம்மானை.

பேராருந் தென்னன் பெருஞ்சிலம்பி லேபிறந்த
சீரார் தமிழணங்கு சிற்றிடைச்சி யம்மானை
சீரார் தமிழணங்கு சிற்றிடைச்சி யாமாயின்
பாரார்க்கு முப்பால் பகர்வளோ வம்மானை
பாவலர்க்கு முப்பால் பகர்ந்தனளே யம்மானை.

தென்னன் மணிக்கூடல் சேருந் தமிழரசி
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யம்மானை
சின்னஞ் சிறுத்தவிடைச் சேணிச்சி யாமாயின்
நன்னூற் கலையினங்கள் நல்குவளோ வம்மானை
நாடுங் கலையினங்கள் நல்குவள்கா ணம்மானை.

சேரன் சிலம்பணிந்த செஞ்சொற் பெருமாட்டி
ஆர வடஞ்சுமந்த வங்குபத்தி யம்மானை
ஆர வடஞ்சுமந்த வங்குபத்தி யாமாயின்
சேருமணி யாழிதண்டு செங்கையுண்டோ வம்மானை
செம்பொன்மணி யாழிதண்டு செங்கையிலுண் டம்மானை.

கொண்டாடிச் சோழன் வளர்த்ததமிழ்க் கோமளப்பெண்
கண்டா லினிக்குங் கரும்புகா ணம்மானை
கண்டா லினிக்குங் கரும்பவளே யாமாயின்
கண்டோடு தேன்மொழிகள் காட்டுவரோ வம்மானை
கண்டோடு தேன்மொழிகள் காட்டுவங்கா ணம்மானை.

பூமலிந்த சந்தப் பொதியிற் புரிகுழலாள்
பாமலிந்த வெட்டெட்டுப் பல்கலைச்சி யம்மானை
பாமலிந்த வெட்டெட்டுப் பல்கலைச்சி யாமாயின்
தூமலிந்த மாமதிக்குத் துணைவியோ வம்மானை
சொன்மலிந்த மாமதிக்குத் துணைவிகா ணம்மானை.

நீரிற் றவழ்ந்து நெருப்பிற் குளித்தருளைக்
கூருந்தமிழ் மடந்தை கொல்லிச்சி யம்மானை
கூருந்தமிழ் மடந்தை கொல்லிச்சி யாமாயின்
வாருமிரும் படிப்போ மென்பாளோ வம்மானை
வாருமிரும் படிப்போ மென்பாள்கா ணம்மானை.

கரியகண்டற் கின்பக் கலையமுதீ காரிகையாள்
அரியகருணை விழியம் படைச்சி யம்மானை
அரியகருணை விழியம் படைச்சி யாமாயின்
புரிகின்ற கைவினைகள் போகுமோ வம்மானை
போற்றினாற் கைவினைகள் போகுங்கா ணம்மானை.

தென்னம் பொருப்பில்வளர் செய்யதமிழ்த் தேவிநல்லாள்
வன்னஞ் செறிந்த நன்னூல் வண்ணத்தி யம்மானை
வன்னஞ் செறிந்த நன்னூல் வண்ணத்தி யாமாயின்
உன்னுபல நூற்கலைகள் ஒலிப்பளோ வம்மானை
உள்ள முருக வொலிப்பள்கா ணம்மானை.

வேலொத்த நாட்டத்து வெண்கமல மெல்லியலாள்
கோலத் தழலிற் குளித்தனளே யம்மானை
கோலத் தழலிற் குளித்தனளே யாமாயின்
ஏலக் குழலி யெரியாளோ வம்மானை
எழுதுமறை மந்திரத்தாள் எரிவளோ வம்மானை.

தீட்டுங் கலைத்தமிழோர் சிந்தாமணி யனையாள்
காட்டுமறைப் பூட்டறுக்குங் கற்பாசி யம்மானை
காட்டுமறைப் பூட்டறுக்குங் கற்பாசி யாமாயின்
வேட்ட பொருட்களவில் வீரியோ வம்மானை
வித்தைப் பொருட்களவில் வீரிகா ணம்மானை.

பற்றான தெய்வப் பனுவற் பசுங்கொடியாள்
வற்றாத நாற்பொருளின் வாரிதிகா ணம்மானை
வற்றாத நாற்பொருளின் வாரிதியே யாமாயின்
பற்றி முனிவன் பருகானோ வம்மானை
பருகிச் சுவையறிந்து பகர்ந்தனன்கா ணம்மானை.

நஞ்சமுத மாக்குமெங்கள் நாயகியாள் முச்சங்கச்
செஞ்சொற் பழந்தருவிற் றேனமுதா மம்மானை
செஞ்சொற் பழந்தருவிற் றேனமுத மாமாயின்
அஞ்சுமலப் போக்கை யடக்குமோ வம்மானை
ஆறுமலப் போக்கு மடக்குங்கா ணம்மானை.

சீரார் தமிழகத்துச் செல்வத் திருவனையாள்
ஆரார்க்கும் நல்லமுத சஞ்சீவி யம்மானை
ஆரார்க்கும் நல்லமுத சஞ்சீவி யாமாயின்
யார்யார்க் குயிர்கொடுத்தா ளிவ்வுலகி லம்மானை
என்புக் குயிர்கொடுத்த திபாரறியா ரம்மானை.

எண்ணெழுத்துங் கண்ணென வின்பத் தமிழ்ப்பெருமாள்
பண்ணமுத்திப் பாடுகின்ற பாணிச்சி யம்மானை
பண்ணமுத்திப் பாடுகின்ற பாணிச்சி யாமாயின்
இன்னொலிசேர் யாழ்குழலு மேந்தினளோ வம்மானை
இருகரத்துஞ் சென்னியிலு மேந்தினள்கா ணம்மானை.

பாருக்குள் வேறொவ்வாப் பைந்தமிழ்ப்பூங் கொம்பனையாள்
வாரிக்கொள் நல்லமுத்து வாணிச்சி யம்மானை
வாரிக்கொள் நல்லமுத்து வாணிச்சி யாமாயின்
ஆருக்கு நல்லமுத்த மருளினள்கா ணம்மானை
அருளினளே வேதனுக்கு மடியனுக்கு மம்மானை.

தாய்க்கு நிகரான தமிழகத்துத் தையல்மணி
வாய்க்குள்ளே மெய்ஞ்ஞான வாரிதியுண் டம்மானை
வாய்க்குள்ளே மெய்ஞ்ஞான வாரிதியுண் டாமாயின்
சீப்க்கும் மணிபவளம் தெரியுமோ வம்மானை
திறந்தால் மணிபவளம் தெரியுங்கா ணம்மானை

காமிக்கு மின்பமொழிக் கன்னித் தமிழுடையாள்
மாமிக் கிங்ஙகா மருமகளா மம்மானை
மாமிக் கிஙங்கா மருமகளே யாமாயின்
பூமிக்குள் மற்றிவர்க்குப் பொருத்தமின்றோ வம்மானை
போவார்க்கும் நிற்பவர்க்கும் பொருத்தமுண்டோ வம்மானை.

பழுதறுக்கு மின்பமொழிப் பன்னூற் கனிவாயாள்
எழுதுமறை நான்கு மியம்பினள்கா ணம்மானை
எழுதுமறை நான்கு மியம்பினளே யாமாயின்
தொழுதெவரு மோதுங்காற் றோடமின்றோ வம்மானை
தோடமெல்லா மோடித் தொலையுங்கா ணம்மானை.

ஒப்பி லமுதமொழி யொண்ணித் திலநகையாள்
செப்புமரு ணூற்கடல்சேர் தெள்ளமுத மம்மானை
செப்புமரு ணூற்கடல்சேர் தெள்ளமுத மாமாயின்
இப்புலவ ரப்புலவர்க் கேற்றமோ வம்மானை
ஏற்றமென்றே யேங்கி யிமையாரா மம்மானை.

வந்தென்னை யாண்டதமிழ் வன்னக்க லாபமயில்
புந்தியினுள் வைத்தாள் புதுவிளக்கொன் றம்மானை
புந்தியினுள் வைத்தாள் புதுவிளக்கொன் றாமாயின்
முந்துமிரு ளெல்லாம் முடிக்குமோ வம்மானை
மூலவிருள் கூட முடிக்குங்கா ணம்மானை.

கன்னித் தமிழருளுங் கற்பகத்துக் காமர்வல்லி
வன்னத் தளிர்கோதும் மாங்குயில்கா ணம்மானை
வன்னத் தளிர்கோதும் மாங்குயிலே யாமாயின்
என்னென்ன கீத மிசைக்குங்கா ணம்மானை
ஏழிசையின் கீத மிசைக்குங்கா ணம்மானை.

ஏடகத்தே நீரில் எதிரேறும் ஏந்திழையாள்
மாடமணி மதுரை வாழரம்பை யம்மானை
மாடமணி மதுரை வாழரம்பை யாமாயின்
வாடா தடியடியாய் வாழுமோ வம்மானை
வந்தே யடியடியாய் வாழ்கின்ற தம்மானை.

தண்டாத மூன்று தமிழ்தந்த கலைவாணி
வெண்டா மரைவிழையும் வெள்ளையன்ன மம்மானை
வெண்டா மரைவிழையும் வெள்ளையன்ன மாமாயின்
கொண்டாடி நான்முகவன் கொள்ளாறோ வம்மானை
கும்பிட்டு நாமிசையே கொள்ளுவன்கா ணம்மானை.

போற்றுகின்ற முத்தமிழ் புத்தமுத முத்துநகை
சாற்றுங் கலைக்கடலிற் சங்கநிதி யம்மானை
சாற்றுங் கலைக்கடலிற் சங்கநிதி யாமாயின்
ஏற்றவர்கட் கென்னென்ன வீயுங்கா ணம்மானை
ஈயுமறம் பொருள்வீ டின்பமுங்கா ணம்மானை.

எம்பா லருளுடைய ஞானத் தமி ழிறைவி
ஐம்பா லணியு மருட்டேனு வம்மானை
ஐம்பா லணியு மருட்டேனு வாமாயின்
அன்பா லப்பாலர்க் கருளினள்கா ணம்மானை
அப்பால் முப்பாலர்க் கருளினள்கா ணம்மானை.

நற்பதத்தை என்சிரத்து நாட்டுந் தமிழரசி
கற்பகத்து வாழுமருட் கற்பகங்கா ணம்மானை
கற்பகத்து வாழுமருட் கற்பகமே யாமாயின்
பொற்பார் மணிமாலை பூக்குமோ வம்மானை
பூவா மணிமாலை பூக்குங்கா ணம்மானை.

பால்போல் நிறத்துப் பனுவல் பெருமாட்டி
கோல்போல் விழிச்சி குழல்கறுப்பி யம்மானை
கோல்போல் விழிச்சி குழல்கறுப்பி யாமாயின்
பால்போல் நிறங்கறுப்புப் பற்றுமோ வம்மானை
பஞ்சவிலக் கணிக்குப் பற்றுதோ வம்மானை.

அல்லம் புபற்கூந்த லம்மை திருமுகத்தில்
சொல்லம் புலியுந் துணைமானு மம்மானை
சொல்லம் புலியுந் துணைமானு மாமாயின்
வெல்லம்புலி மானில் வீழாதோ வம்மானை
வில்லிட்டுக் காப்பிட்டால் வீழுமோ வம்மானை.

திங்கட் பிளவுநுதற் செய்யதமிழ்த் தையனல்லாள்
சங்கப் பலகைத் தனிப்புலவி யம்மானை
சங்கப் பலகைத் தனிப்புலவி யாமாயின்
அங்குபல நூல்வரைந்தே யருளுவளோ வம்மானை
ஐயிரண்டு மெட்டு மறுமூன்று மம்மானை.

சிந்தையிருள் கெடுக்குந் தெய்வ மொழிமடந்தை
புந்தியினி லெட்டுமணப் பூவாகு மம்மானை
புந்தியினி லெட்டுமணப் பூவாகு மாமாயின்
எந்தமண மெட்டுமணந் தேற்றமண மம்மானை
இன்பமண மெட்டுமணத் தேற்றமண மம்மானை.

தேவர் மணியணிந்த செய்யதமிழ் கோமாட்டி
நாவலர்க்கு நல்ல நவநிதிய மம்மானை
நாவலர்க்கு நல்ல நவநிதிய மாமாயின்
பூவில் தரித்திரராய்ப் போவானே னம்மானை
பொருள்தரித்தி ராதழிந்து போவதா லம்மானை.

மைய லழித்ததமிழ் மாதா வணிகலன்கள்
வையகத்தி லெங்கும் மறைந்தனகா ணம்மானை
வையகத்தி லெங்கும் மறைந்தனவே யாமாயின்
மையிட்டுக் கண்டெடுத்து வையாரோ வம்மானை
வைத்தாலு மாசையொடு வாங்காரா மம்மானை.

கோதி முடித்த குழற்கூடற் குலக்கொழுந்து
சோதிவடிவேற் பெருமான் துணைவிகா ணம்மானை
சோதிவடிவேற் பெருமான் துணைவியே யாமாயின்
ஆதி மலைக்குறத்தி யாவாளோ வமமானை
ஆர மலைக்குறத்தி யானாளே யம்மானை.

அஞ்சுமுகன் வாழி யாறுமுகன் வாழி
வஞ்சியுமை வாழிவாழி தெய்வ யானைவள்ளி
மஞ்சு தவழ்பொதிய மாமுனிவன் றாள்வாழி
கொஞ்சு மமுதமொழிக் கூற்றரசி வாழியவள்
அஞ்சொற் செழுந்தமிழ்ப்பா வம்மானை வாழியரோ.

நாமகள் வாழ்க.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

மதுரை
காஞ்சீபுரம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[234-வது பக்கத் தொடர்ச்சி]

தீர்த்தனேன் றோர்ந்தார் செயல்.

நிகிலத்தினைமைப்பில்எல்லாம்ஈடுசெய்யப்படுகின்றது.

இன்மைக்கு எதிரெதிரே இருப்பன நிற்பதால் யாவும் சமமாய்விடும். கண்ணில்லாக் குறையை நுண்ணறிவு நிறப்பும். வறுமையின் வாட்டத்தைத் தாங்குதற்கேற்ற பொறுமையும் வந்து சேரும். செல்வத்தின் பெருமிதம் தகவிலா மக்களால் தலைசாய்வதுண்டு. கல்வியின் மிகுதியை ஈடு செய்வதற்கு நல்குரவு நண்ணுகின்றது. மணம் மிகவுடைய பூக்கள், பழுப்பதில்லை. வேகமுடைய மான்களைத் தடுப்பதற்குக் கொம்புகள் நீண்டுள. ஆட்சியுடையோர்க்கு அமைதியில்லை; அமைதியிருப்போர்க்கு அதனை அனுபவிக்கத் தெரிவதில்லை. இப்படியே, நினைந்தேத்தித் தொழுவதற்கோர் கடவுளில்லாக் கடவுள், எல்லாருந் தன்னை நினைந்தேத்தித் தொழும் வகையில் அதனை ஈடு செய்துகொள்கின்றார்போலும். கண்டவரெல்லாம் இராமனைக் கண்கதுவப் பருகிக் கைகூப்பித் தொழுகின்றார். பள்ளத்துப்பாயும் நன்னீரனையராய் மிதிலைமாதர் உலாப்போந்த இராமனை உற்றடைந்தவாறுபோல் இவ்வயோத்தியிலும்,

திருமணி மகுடஞ் சூடச்
சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்திக்
காதலொ டுவகை யுந்த
இருகையு மிரைத்து மொய்த்தா
ரின்னுயிர் யார்க்கு மொன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப்
புறத்திடைக் கண்டார் போல்வார்

[அழகிய இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைச் சூடிக்கொள்ள வீரனிவன் செல்கின்றான் என்று, ஆசையும் உவகையும் தூண்டுவதால் ஒருவருக்கொருவர் முற்பட்டு இருபுறத்தும் ஆரவாரத்துடன் அடர்ந்த மாந்தர், அவரவர்க்குத் தனித்தனி இனிமையாயிருக்கின்ற உயிரானது எல்லாருக்கும் ஒன்றேயாகி ஒரு ஒப்பற்ற தேரில் செல்லப் புறத்தே அதனைக் கண்டவரை ஒத்தார்]

கடவுளாராதனையின் கைகண்ட பலன்களில் முதற் பயன் இது. தனித்தனி தனக்கே இனியதென்று தோன்றிநின்ற உயிர், கடவுட்காட்சி எய்தினோர்க்குப் பின்னர் அத் தனியினிமைத்தோற்றம் மாறி அனைவர்க்கும் ஒன்றேயாய் அமைகின்ற உண்மை புலப்படலாகின்றது. உள்ளே மறைந்து உணரப்படாதிருந்த அவ்வுயிர் புறத்தொரு தேரில் போனதென்னத் தெற்றெனத் தோற்றுதலும் கடவுட்காட்சிக்குரியதோர் நன்மையாம்.

கடவுளை ஆராதிக்கப் புகுவார்க்கு உளதாகும் காட்சிவேற்றுமையை அவ்வண்ணங் காட்டிய கம்பர், அதனால் விளைகின்ற கருத்து வேற்றுமையை,

சுண்ணமு மலருஞ் சாந்தும்
கனகமும் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும்
வளைகளும் சிந்து வாரும்

ஆயின ஓர் விந்தையால் விளக்குகின்றார். பூவும் நீருங்கொண்டு அருச்சனைகளைப் புரிபவர், முதலில் கடவுளுக்கு அதனால் சிறப்புண்டாகு மென்றேனும் அல்லது தமக்குப்பயனுண்டாகுமென்றேனும் தொடங்கலாமெனினும், அவ்வாராதனையின் நோக்கம் வேறுவிதமாக மாறித் தாமொன்று பெறுவதென்னும் நினைவிற் கெதிராய்த் தம்மையே அக்கடவுளுக்கு அளித்து நிற்பார். சுண்ணமும் மலரும் சாந்தும் கனகமும் தூவுவதென்ற நோக்கத்தால் தொடங்கியவர் மேகலை நாண் வளைகளென்று தம்மினின்று ஒவ்வொன்றாய்த் துறந்து பிறகு தம்மையே அப்பரமனுக்கு அர்ப்பணஞ் செய்துநிற்பவ ராகின்றார். இவ்வாறாயவர் பின்,

செங்கணுங் கரிய கோல
மேனியுந் தேரு மாகி
எங்கணுந் தோன்று கின்றா
ரெனைவரோ விராம னென்பார்

என்று கம்பர் அம்மாதர் சரிதத்தை முடித்தது இங்குரைத்த தத்துவத்திற்கு முற்றிலும் ஏற்புடைத்தாகும். இத்தகைய மாதரார் தொகுதிக் கிடையே இராமன் சென்றதை,

துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச்
சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி
வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந்
தோளெனும் பணைத்த வேயுங்
கண்ணெனுங் கால வேலு
மிடைநெடுங் கானம் புக்கான்

[அச்சத்தை விளைவிக்கின்ற சொற்களையுடைய கைகேசி கட்டளையிட, ஒளிபொருந்திய கிரீடத்தைத் துறந்து தூய்மையான இராச்சியம் என்னும் திருவைவிட்டு வெளியேகுவதற்கு முன்னரே, அவ்விராமன், பண்போன்ற மொழிகளையுடைய மாதர்களது தோள்களாகிய பருத்த மூங்கில்களும், கண்களாகிய யமன்போன்ற வேல்களும் நெருங்கிய காட்டிற்கிடையே புகுந்தான்.]

என்று ஒரு காட்டிற்குப் போவதன்முன் மற்றொரு காட்டின்வழிச் சென்றானபதைச் சாதிக்கும் பாசுரம், புகழேந்திப் புலவர் பாடிய

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த [வளைத்
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்கு
தேனுடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக

என்னும்நளவெண்பாச்செய்யுளைநினைப்பூட்டுகின்றது.

மாதர்நிலை யின்னதாக, இராமன்தன் வரவுகண்ட முதினரும் இளைஞர்தாமும் அவனைப்பலபடி வழுத்தி வாழ்த்துவாராகின்றார். "உலகம் உய்ந்தது, ஊழி காண்பான் இவன், எங்கள் வாழ்நாட்களை யெல்லாம் நீ கொள்க, தவங்களின் பயனெல்லாம் நீயெய்திப் புண்ணியப் பயன்களை அடைவாயாக, தாமரையும் மேகமும் இவனது கண்களையும் நிறத்தையும் ஒத்திருக்க எத்தவம் செய்தவோ! இவனைத் தந்த தயரதனுக்கு இவ்வுலகம் என்ன கைம்மாறு ஆற்றுமோ! யானைக்கு எதிர்வந்து முதலையின் உயிரை மாய்த்த நாரணனே போன்ற கருணையன் இந்நம்பி. இவன் தேவர்களிலொருவன் அல்லன், தேவாதிதேவனாகிய ஆதிமூர்த்தியே. சகரர் பகீரதன் ககுஸ்தன் முதலிய வேந்தர்களது புகழும் இவனது தோள்களைத் தழுவியே நிற்கின்றது. இவனும் ஒரு புத்திரனாக, புத்திரரென நாம் பெறுவது புல்லிது. இவன் அரசாள்வதால் கைகேசி அதிகமும் உவகை அடைவாள். இவனுக்கு அடங்கிநிற்கும் அரசர்கள் செய்துள பாக்கியம் பெரிது," என்று இன்னவாறு விளம்பிக் களித்தவராய்,

ஆரண மறித றேற்றா வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார்

[வேதங்களாலும் அறியப்படாத இராமனை நெருங்கிப் பார்த்து, யாதும் காரணமின்றித் தம் கண்கள் நீர் சொரிய நிற்பார்]

காரணம் அவர்தாம் அறியாராயினும், இவ்விராமன் பிறந்தநாள் அயோத்தியில் நிகழ்ந்ததை நினைவிற் கொண்டக்கால், "தீர்த்தனென் றறிந்ததோ அவர்தம் சிந்தையே" என்று அங்குக் கம்பர் உரைத்ததினின்று காரணந் தெரிந்துகொள்ளல் அருமையன்று.

நோயற்ற : : : : வாழ்வே	ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்	குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ. 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபசர். கா. கோவிந்தாச்சார்,
மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to :— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, 113, Armenian Street,
G. T., Madras.

- நவீன பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. **2 0 0**
வெளி நாடு ,,	ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. சுப்ரமணியம்.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ. **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம்பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா
M. B., & C.M., & M.L.C.
அவர்கள் பரிசோதித்த
R.S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாட்டில் 1-க்குஅணா 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வரைக.

விலை:—(தாபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

வாசகசாலை, புத்தகசாலைகளுக்கு ::

:: ஓர் அரிய சமயம்!

1931ஞு எப்ரல்மாதம் 1-ந்தேதி முதல் ஜூன் மாதம் 30-ந்தேதிவரையில் பிரசித்தி பெற்ற வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் எழுதியுள்ள கீழ்க்கண்ட 13 நாவல்களுக்கு ஏககாலத்தில் ஆர்டர் செய்யும் வாசகசாலைகளுக்கும் (லைப்ரெரி) புஸ்தகசாலைகளுக்கும் 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும். ஷை நாவல்களில் 1 அல்லது 2க்கு ஆர்டர் செய்வோர்களுக்கு ரூபாய்க்கு 2 அணா கமிஷன் கொடுக்கப்படும்.

வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

				ரூ.	அ.
1.	பூர்ண சந்திரோதயம்	4	பாகங்கள்	7	8
2.	மதனகல்யாணி	3	,,	4	8
3.	சௌந்தர கோகிலம்	3	,,	6	0
4.	திகம்பரசாமியார்	2	,,	3	0
5.	,, பால்யலீலை	2	,,	5	0
6.	மாயாவினோதப்பரதேசி	2	,,	5	0
7.	மேனகா ,,	2	,,	3	0
8.	பாலாமணி			2	8
9.	வஸந்தமல்லிகா			1	8
10.	வித்யாசாகரம்			1	4
11.	திவான் லொடபடசிங் பகதூர்			0	12
12.	திலோத்தமா			0	12
13.	மாணிக்கவாசகர்			0	8

பி. இரத்தின நாயகர் & சன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
41. வெங்கட்ராமய்யர் தெரு, ஜி. டி. மதராஸ்.

அருமையான பொடி ! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள் !!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

பிறர் கைப்பட்ட
சமையலென்ற பழியில்லை

ஆர் கைப்பட்டதோ, ஆர் பார்த்ததோ, ஆர் சமைத்ததோ என்று கூசிக்கூசி உண்ணுமல் விடுபவர்கள் மனரம்மியத்துடன் உணவு உண்ணக்கூடிய வழிகாட்டும் துணை

ருக்மணி
குக்கர்

தாங்கள் தாங்களே வேண்டியபடி, வேண்டும்போது தம் கைகளாலே, தொந்தரவு இல்லாமல் சமைத்துக் கொள்ளலாம். 1, 2, 4, 6, 8, 12, 16, பேர்களுக்கு ஏழு அளவுகளில் ரூ. 12, 16, 20, 25, 31, 37,44-ல் உண்டு. விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம் (12) சென்னைப்பட்டினம்,

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம் !

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.



உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.
எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

காங்கிரஸ் மஹாநாடு.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கராச்சியில் காங்கிரஸ் மஹாநாடு கூடிற்று. இக் காங்கிரஸின் தலைவரான ஸர்தார் வல்லபாய் பட்டேல் நிகழ்த்திய முன்னுரைச் சுருக்கம் வருமாறு:—

"கடந்த வொரு ஆண்டாக நமது முயற்சியின் பயனாய் ஜெயமடைந்து விட்டோம். எனவே நமது போராட்டத்தைப்பற்றி இப்பொழுது எதுவும் குறிக்கப்படவேண்டுவதில்லை. இப்பொழுது ராஜப் பிரதிநிதியுடன் ராஜிஏற்பாடு செய்துகொண்டுள்ளோம். அந்த ஏற்பாட்டை இம் மஹாநாடு ஏற்றுக்கொள்ள வேண்டுவது அவசியமாகும். இனி நாம் செய்ய வேண்டுவது, வட்டமேஜை மஹாநாட்டில் கலந்து கொண்டு நமது நாட்டார் ஏற்றுக்கொள்ளக்கூடியதான அரசியல் திட்டத்தை நிர்ணயிக்க வேண்டுவதேயாகும்.

இந்தியக்கடன் விஷயமாய் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய் நினைத்தும் சொல்லியும் வருகின்றார்கள். இந்தியாவின்மீது சுமத்தப்படும் கடன் அனைத்தையுமே ஏற்றுக்கொள்ள முடியாதென நாம் ஒருபோதும் மறுத்ததில்லை. நாம் எந்தச் செலவுகளைக் கொடுக்க முடியாதென மறுக்கின்றோமோ அச்செலவுகளைப்பற்றி நன்கு விசாரணை செய்யவேண்டுமென்றே வற்புறுத்தியுள்ளோம். இனியும் அப்படியே கோருவோம். இந்தியாவின் மேல் சுமத்தப்படும் செலவுகளில் சில அநீதமானவைகளே.

லாகூர் காங்கிரஸில் செய்யலான பூர்ண சுயேச்சைத் தீர்மானம் நாட்டினரால் ஏற்கப்பெற்றது. அத்தீர்மானத்தினின்று நாம் ஒருபோதும் பின்போகப் போவதில்லை. ஆனால் பிரட்டனுடனும், மற்ற நாடுகளுடனும் எச்சம்பந்தமும் கூடாது என்பது சுயேச்சையின் பொருளன்று. நமது நாட்டுநலம் கெடாதபடியதான பங்காளித்வ முறையில் சம உரிமையுடன் சேர்ந்து வாழ்வது சுயேச்சைக்கு மாறுபட்டதாகாது. பங்காளித்துவம் ஒரு நாட்டோடு வேண்டாவென்று இந்தியா கருதுமானால் எந்தச் சமயத்திலும் நாம் விலகிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லாது போகவில்லை.

பர்மாப் பிரிவினை விஷயமாய்ப் பலர் பலவாறு பேசிக்கொள்கின்றனர். பர்மியர் மனம் இவ்விஷயத்தில் எப்படியிருக்கின்றதென்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். பர்மா இந்தியாவுடன் சேர்ந்து இருக்கவேண்டுமா அல்லது பிரிக்கப்பட வேண்டுமா என்பதைப் பர்மியரே ஆலோசனை செய்து முடிவுக்கு வரவேண்டும். சுயேச்சை இந்தியாவுடன் சேர்ந்திருக்க வேண்டுமென்னும் எண்ணமுடைய கட்சி ஒன்று பர்மாவில் இருக்கின்றது. எனவே இவ்விஷயமாகப் பர்மியர் அபிப்பிராயம் தெரிந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இனி வகுப்பு விவாத விஷயத்தை நோக்குவோம். மற்றெல்லா விஷயங்களைக்காட்டிலும் இந்துமுகமதிய விவாதமே நமது முயற்சிக்கு இடையூறாய் இருக்கின்றது. இந்த விஷயத்தில் நாம் ஒரு முடிவு செய்ய வேண்டும். சுதந்தரம் பெற்ற இந்தியா தேசிய முறையில் இவ்வகுப்பு விஷயங்களைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்று காங்கிரஸ் நம்புகின்றது. எனவே இந்துக்களும் முகமதியர்களும் பரஸ்பர நம்பிக்கையுடனும் தாராள சிந்தையுடனும் ஒற்றுமைக்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். ஒரு வகுப்பார் மேல் மற்ற வகுப்பார் சந்தேகம் கொள்ளக் கூடாது. காகிதத்தில் ஓட்டுப்போட்டுச் செய்யும் ஒற்றுமை ஒற்றுமையாகாது. மன ஒற்றுமை அவசியம்.

அன்னியசாமான் பகிஷ்கார விஷயமாய் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகின்றேன். நாம் பிரிட்டிஷ் துணிகளை மாத்திரமேயன்றி அயல் நாட்டுச் சரக்குகளையே விலக்கக்கூடிய வழியில் பகிஷ்கரிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டில் பொருளாதார அபிவிர்த்தி ஏற்படும். நாம் பகிஷ்காரத்தை ஒரு கருவியாக உபயோகிக்கக் கூடாது. இப்பொழுது ராஜி ஏற்பாடுசெய்துகொண்டுள்ளோம். எனவே பிரிட்டிஷ்சாமான் பகிஷ்காரத்தை விடுத்து நாட்டின் பொருளாதார அபிவிர்த்திக்கானபடி எந்நாட்டார் பேரிலும் கோபமில்லாதபடியும் சமாதானஹீன மேற்படாதபடியும் அன்னியச் சரக்குகளை விலக்கி நம் நாட்டுக் கைத்தொழிலை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிச் செய்வது ஒவ்வொரு நாட்டின் பிறப்புரிமையாகும். இனி நாம் சுதேச இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளையும் சுதேச பாங்குகளையும், சுதேசக் கப்பல் கம்பனிகளையும் ஆதரிக்கவேண்டும். பூர்ண மதுவிலக்கிற்கும் நாம் இனி முயலவேண்டும்.

இனி உப்புச் சட்டத்தை மீறும் இயக்கத்தை நிறுத்திவிட வேண்டும். கடற்கரை ஓரத்தில் இருப்பவர் உப்புக் காய்ச்சிக்கொள்ளலாம். அருகிலுள்ளவர்களிடம் விற்கவும் செய்யலாம். இதனால் உப்பு வரியே அகன்றது என்று கொள்ள வேண்டா. இனி நாம் செய்யும் விடுதலைத் திட்டத்தில் இவ்வரி ரத்து செய்யப்படும்.

அமிர்தகுணபோதினி
இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.
எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்
நீங்கள் "அமிர்தகுணபோதினி" யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப்பத்திரிகைபாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து எல்லாம் அநுபவம் எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0. மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனம்.

புரோப்ரைட்டர்
தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. ... தெரு, சென்னை.

18911

KALANILAYAM.
REG. NO. M. 2324.

அறிக்கை.

பிரசித்திபெற்ற வடுவூர். K. துரைசாமிஐயங்கார் நாவல்களைக் கே. விஜயம் கம்பெனி யாரிடமிருந்து காபிரைட் சுதந்திரத்துடனும் ஷை கம்பெனியார் இதுவரையில் அச்சிட்டு வியாபாரம் செய்துவந்த நாவல்கள் அனைத்தையும் நாங்கள் விலைக்கு வாங்கியுள்ளோம். ஆதலால் இனி ஷை நாவல்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட எமது விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பி. இரத்தின நாயகர் & சன்ஸ், புஸ்தக வியாபாரி,
41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி மதராஸ்.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்
வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மல பந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆயாசம், மனச்சோர்வு, ஞாபக மின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெறுகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ.	18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)	10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது.	6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்.

எம். ஸி. என். ஸ்நானத் தைலம்.

இது ஸ்நானத்திற்காகவே தயாரிக்கப்படுவது. இதில் சேர்ந்துள்ள மூலிகைகளும், எண்ணெயும் சாஸ்திரீயமானவை. தலை நோய்கள், கண்களில் ஏற்படும் சில வியாதிகள், உடம்பில் ஏற்படும் வலிகள் இதை உபயோகித்து வர ஒழிந்துபோம். காலஞ்சென்ற டாக்டரின் சிறந்த ஸ்நானத் தைலம் இதுவே. வக்கீல்கள், மாணவர்கள், மூளையைக் கொண்டு பிழைப்பவர்கள் முதலியவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம். மூளையைக் குளிரச் செய்து ஞாபகசக்தியை வளர்ப்பதில் ஒப்புயர்வற்றது. விபரகாட்லாக் இனும்.

6 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 1-0-0

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் என்று கருதலர்கும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணு 12.

3. கம்பராமாயணம்.பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப் பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணு 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount.Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)